
விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.03.2003) தொலைபேசி- 2223378 ஒலி 87

## தலைவர் பிரபாவின் தீர்மானம்



# 6-வது சுற்றுப் பேச்சில் புலிகள் பங்கு பற்றுவர்!

## ஆலோசகர் பாலசிங்கம் அறிவிப்பு



(கிளிநொச்சி)

**யப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுச சமாதானப்பேச்சுவார்த்தையைப் பகிஷ்கரித்து எமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதிலும் பார்க்க,பேச்சுவார்த்தையில் பங்கு பற்றி நேரடியாக எமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதுதான் புத்திசாலித்தனமானதென்று தலைவர் வே.பிரபாகரன் முடிவு செய்துள்ளார்.**

**அதற்கிணஙக சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

இம் மாதம் 18ம் திகதி யப்பானில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதென்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் எடுத்திருந்த முடிவினை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று மாலை இச் செய்தியாளர் மாநாடு நடை பெற்றது.

இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

திருகோணமலை ஆழ்கடற் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் மேற் கொள்ளப்பட்ட கப்பல் தாக்கி அழிப்புச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பில் (10ம் பக்கம் பார்க்க)

## மகாபோதி மரத்திற்கு நோய்த்தொற்று

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக் குக் கொண்டுவரப்பட்ட பௌத்த சமயத்தவர்களின் வழிபாட்டிற்குரிய, மகா போதி மரம் வைரஸ் நோய்த் தொற்றிற்கு இலக்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கலாசார அமைச்சர் கருணா சேனகொடித்துவக்கு இவ்விடயத்தினை யுனஸ்கோ நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதுடன் அம் மரத்தினை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கையை விரைவில் மேற் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

(உ-10)

## போராட்டம் கைவிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் மேற் கொண்டு வந்த வேலை நிறுத்தம், துணை வேந்தர் மற்றும் கலைப் பீடாதிபதி ஆகியோருடன் நேற்று முன்தினம் நடை பெற்ற கலந்துரையாடலை அடுத்து முடிவுக்கு வந்துள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்து விளக்குவதற்காக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் நாளை காலை 8.30 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்று கூடுமாறு சங்கத்தின்செயற் குழு கேட்டுள்ளது.

(த.5)

## அரசு-புலிகள் இரு தரப்பால் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

### நோர்வே அமைச்சர் ஹெல்கீஸன் கருத்துரை

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளின் மூலமாக வெற்றி தோல்வி சம்பந்தப்பட்ட இருதரப்புகளினதும் செயற்பாடுகளில் தங்கியுள்ளது. இருதரப்பினரால் மாத்திரமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.வெளிச் சமூகத்தால் சமாதானத்தைத் திணிக்க முடியாது.

இவ்வாறு கொழும்பு சர்வதேச உறவுகளுக்கான மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் கூறியுள்ளார்.

சமாதானமும் இணக்கப்பாடும் என்ற தலைப்பில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் அவர் தொடர்நது உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் ஆயுத கலாசாரத்தில இருந்து விலகி முழுமையான அரசியல் நீரோட்டத்தில் ஈடுபட மேலும் கால அவகாசம் தேவை என்பதை இலங்கை அரசும் ஏனைய கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயிரக் கணக்கான போராளிகள் தங்களை ஜனநாயகத்திற்கு (10ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த(சா/த)பரீட்சை பெறு பேறுகள் ஏப்ரல் மூற்பகுதியில்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் இம் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாதததின் தொடக்கத்தில் வெளியிடப்பட இருக்கின்றதென்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலை மட்டத்து மதிப்பீடுகள காரணமாகவே பெறுபேறு (10ம் பக்கம் பார்க்க)

## பேச்சில் கலந்து கொள்ளும் புலிகள் இன்று பயணம்

(கிளிநொச்சி)

யப்பான் தலைநகர் ரோக்கியோவில் 18ம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ள 6வது சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையில் இன்று காலை 11 மணிக்கு கிளிநொச்சியில இருந்து கொழும்பு செல்லவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் விடுதலைப் புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோர் கிளிநொச்சியில் இருந்து விஷேட ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு சென்று பின் அங்கிருந்து இன்றிரவே யப்பானுக்கு பயணமாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அரச குழுவினர் நேற்று யப்பான் புறப்பட்டனர்

(கொழும்பு)

யப்பானில் 18ம் திகதி முதல் 4 தினங்கள் நடைபெறவுள்ள 6வது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அரசின சார்பில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட, அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலகா ஆகிய இருவரும் நேற்று யப்பான் பயணமாகியுள்ளனர்.

இதே வேளை சமாதானப் பேச்சுவார்தைக்கு அரச குழுவிற்கு தலைமை தாங்கும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, அமைச்சர் ராவூப் ஹக்கீம் ஆகியோர் இன்று யப்பான் பயணமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க நேற்று யப்பான் சென்றுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் அவரது மனைவியும் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## புலிகளின் கப்பல் மீது தாக்குதல் விசாரணை அறிக்கை இன்று வெளிவரும்

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் இன்று வெளியிடப் படவுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் இன்று வெளியிடப் படவுள்ள இவ் விசாரணை அறிக்கை விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கண்காணிபுக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கப்பல் தாக்கி அழிக்கப் பட்ட சம்பவம் தொடர்பாக கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் தயா சந்தகிரியை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.இக்கலந்துரையாடலின் போது விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை தாக்கி அழித்த கடற்படையினரும் பிரசன்னமாகியிருந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விசாரணைக்கு உதவியாக தாக்குதல் சம்பவம் தொடர்பான ஒளிப்பதிவு நாடாவும் கடற்படையினரால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (வ)

## களுத்துறைக் கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(களுத்துறை)

தம்மை விடுவிக்குமாறு கோரி களுத்துறையில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை மேற் கொண்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 14வது நாளான நேற்று தமது உண்ணாவிரதத்தை இடை நிறுத்தியுள்ளனர்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி,மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் பணிப்பாளர் என்.கந்தசாமி ஆகியோர் நேற்று களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று உண்ணவிரதிகளுக்கு அளித்த வாக்குறுதியை அடுத்து தமிழ் அரசியல் கைதிகள் தமது சாகும் வரையிலான உண்ணாவிரத்தை இடை நிறுத்தியுள்ளனர்.தமிழ் அரசியல்கைதிகளின் வழக்கு (10ம் பக்கம் பார்க்க)




# சிம்பாப்வேயை வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது இலங்கை அணி

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியில் சிம்பாப்வேக்கும் இலங்கைக்கும் இடையில் நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி 74 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டிக்கு மூன்று அணிகள் தெரிவாகியுள்ள வேளையில் நான்காவது அணி நியூசிலாந்தா இலங்கையா என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் .நேற்று முன்தினம் இந்தியாவுக்கும் நியூசிலாந்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து தோல்வியைத் தழுவியது. நேற்றைய போட்டியில் இலங்கை வென்றால் இலங்கையும், சிம்பாப்பே வென்றால் நியூசிலாந்தும் என்ற நிலையில் இருந்த வேளை இலங்கை அணி சிறப்பாக விளையாடி அரையிறுதிக்கு தெரிவாகியது.

நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கி நிதானமாகவும் பொறுமையாகவும் விளையாடி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்களைப் பெற்றது.

257 ஓட்டங்கள பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி தொடக்கத்தில் 3 ஓவர்கள் சிறப்பாக விளையாடியது. அதனைத் தொடர்ந்து அணியின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின. இறுதியாக 41.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

இதேவேளை அரையிறுதிக்கு தெரிவாகியுள்ள இலங்கை அணி போர்ட் எலிசெபத்தில் அவுஸ்திரேலிய அணியுடன் மோதவுள்ளது. இப் போட்டி மிக முக்கிய போட்டியாக இலங்கை அணிக்கு இருக்கும். சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தின் போது இலங்கை அணி அவுஸ்திரேலியாவுடன் மோதி தோல்வியடைந்தமை தெரிந்ததே. இதனால் இப் போட்டி இலங்கை அணியை இறுதிப் போட்டிக்கு கொண்டுசெல்லுமென நம்ப முடியாது எனினும் போர்ட் எலிசெபத் மைதானம் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான மைதானம் என்பதால் இலங்கை சுழல் பந்து வீச்சாளர்களான முரளிதரன், ஜெயசூரியா, டி சில்வா ஆகியோரின் பந்து வீச்சு முக்கியத்துவம் பெறும். இப் போட்டியில் இலங்கை அணி வென்றால் இறுதிப் போட்டியில் இந்தியாவைச் சந்திக்கும்.

இதேவேளை ''இலங்கை அணி சிம்பாப்வேயை வென்று அரை இறுதிக்கு தெரிவாக வேண்டும் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவுடன் விளையாடி வெற்றி பெற போர்ட் எலிசெபத் மைதானம் உதவும். இதனால் இலங்கையும் இந்தியாவும் இறுதிப் போட்டியில் சந்திக்கும். இதுவே எனது விருப்பம்'' என்று சில தினங்களுக்கு முன் இந்திய அணித் தலைவர் கங்குலி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)







இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆட்டத்தின் சில காட்சிகள்

## உலகக் கிண்ணத்தை வென்றால் 7.5 கோடி ரூபா பணப்பரிசு இந்திய அணிக்கு கிடைக்கும்



உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிக்கான அரை இறுதிக்கு இந்தியா முன்னேறிய இந்த மகத்தான சாதனையை பாராட்டி இந்திய அணிக்கு ரூ.1.87 கோடி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அணியில் இடம் பெற்றுள்ள 15 வீரர்களுக்கும் தலா ரூ12.5 லட்சம் பகிர்ந்து கொடுக்கப்படவுள்ளது.

இந்திய அணி எதிர்வரும் 20ம் திகதி நடைபெறும் அரை இறுதியில் கென்யாவுடன் மோதக் காத்திருக்கிறது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றால் வீரர்களுக்கு மேலும் பல பரிசுத் தொகை வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெற் சபைத் தலைவர் டால்மியா அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றினால் ரூ7.5 கோடி பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும் என்றும் டால்மியா கூறினார். இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றினால் பயிற்சியாளர் ஜான்ரைட் மற்றும் உடல் தகுதி நிபுணர்கள் லெய்பெஸ், அட்ரெய்ன் லீ ரவுக்ஸ் ஆகியோர்களுக்கும் பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது. (த)

## தென்னாபிரிக்காவில் இந்திய நட்சத்திரங்கள்

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற அதிக வாய்ப்புக்கள் உள்ளதையடுத்து இந்திய நட்சத்திரங்கள் தென்னாபிரிக்காவுக்கு படையெடுக்கின்றனர்.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றால் பிரதமர் வாஜ்பாய் அந்த இறுதிப் போட்டியைக் காண தென்னாபிரிக்கா செல்லவிருக்கிறார். இதைத் தவிர பிரபல தொழிலதிபரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜய் மல்லையா தனக்குச் சொந்தமான போயிங் 727 விமானத்தில் பரூக் அப்துல்லா, முன்னாள் உலக அழகி நபிசா அலி, ரித்து பேரி, பரமேஷ்வர் கோத்ரெஜ், ராஜீவ் சுக்லா, தேவன் நரங் ஆகிய பிரபலங்களுடன் தென்னாபிரிக்கா செல்ல இருக்கிறார்.

சகாரா நிறுவன சுபோத்ரா ராய், அணில் அம்பானி, அமிர்தாப்பச்சன், அமர்சிங் ஆகிய பிரமுகர்களும் குடும்பத்துடன் தென்னாபிரிக்காவுக்கு படையெடுக்கவுள்ளனர்.

இந் நிலையில் பொலிவூட் நட்சத்திரங்களும் அவர்கள் பங்குக்கு தென்னாபிரிக்கா செல்லத் திட்டமிட்டுள்ளனர். நடிகைகள் பிரீத்தி ஜிண்டா, ஐஸ்வர்யாராய், ரவீணா தாண்டன், மனிஷா கொய்ராலா,பிரியங்கா சோப்ரா, பிபாசா பாசு, நடிகர்கள் அமீர்கான், சுனில் ஷெட்டி ஆகியோரும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றனர். (த-5)

## மேற்கிந்தியத் தீவு அணியின் தலைவராகும் வாய்ப்பு சர்வணுக்கு

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு புதிய தலைவரை நியமிக்க ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. உலகக் கிண்ணக் கிரிக்கெற்றில் முதல் சுற்றோடு வெளியேறிய மேற்கிந்தியத் தீவு அணி அடுத்த உலகக் கிண்ண போட்டியை நடத்தும் ஆவலுடன் காத்திருக்கிறது. பரிதாபமான முடிவை சந்தித்த மேற்கிந்தியத் தீவு அணியில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளது. 36 வயதான தற்போதைய தலைவர் கூப்பர் கூடிய விரைவில் அணியில் இருந்து ஓய்வு பெறுவார் என்றும் துணைத் தலைவர் ஜேக்கப்சுக்கு வயதாகி விட்டதால் அவரை நியமிக்க முடியாது என்றும் தெரிவிக்கப் படுகிறது. இதனால் புதிய தலைவரை தெரிவு செய்வதற்கு மேற்கிந்தியத் தீவு கிரிக்கெற் சபை முடிவு செய்திருக்கின்றது.

உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக ஆடிய இளம் வீரர் சர்வணை புதிய தலைவராக தெரிவு செய்ய ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக சர்வண் கூறும்போது, அணியை வழிநடத்த தேவையான தகுதிகள் எதுவும் என்னிடம் இல்லை எனவே இது பற்றி யோசிக்க வேண்டும் என்றார். (த-5)

### உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### இலங்கை எதிர் சிம்பாப்வே

**இலங்கை**

50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அத்தப்பத்து | not out | | 103 | (127) |
| ஜெயசூரியா | c தைபு | b ஸ்ரீக் | 22 | (44) |
| குணவர்த்தனா | c&b மரிலியர் | | 41 | (62) |
| டி சில்வா | c தைபு | b எர்வின் | 25 | (31) |
| சங்ககார | c G.பிளவர் | b ஸ்ரீக் | 35 | (25) |
| ஆனொல்ட் | c G.பிளவர் | b ஹொண்டோ | 1 | (3) |
| சமிந்தவாஸ் | not out | | 11 | (8) |

உதிரிகள் –18

**பந்து வீச்சு - சிம்பாப்வே**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீக் | 10 | 40 | 2 |
| பிளிக்நற் | 8 | 40 | 0 |
| ப்ரெண்ட் | 2 | 13 | 0 |
| ஹொண்டோ | 5 | 36 | 1 |
| G.பிளவர் | 10 | 44 | 0 |
| மரிலியர் | 10 | 43 | 1 |
| மற்சிகென்யேரி | 2 | 13 | 0 |
| எர்வின் | 3 | 24 | 1 |

**சிம்பாப்வே**

41.5 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| விஸ்சாட் | b ஜெயசூரியா | | 43 | (71) |
| மரிலியர் | c ஜெயசூரியா | b குணவர்த்தன | 19 | (14) |
| ப்ரெண்ட் | b குணவர்த்தன | | 19 | (14) |
| A.பிளவர் | lbw | b சில்வா | 38 | (51) |
| G.பிளவர் | c&b ஜெயசூரியா | | 31 | (52) |
| தைபு | b முரளிதரன் | | 2 | (10) |
| பிளிக்நற் | c டி சில்வா | b பெர்ணான்டோ | 1 | (5) |
| எர்வின் | b சமிந்தவாஸ் | | 12 | (19) |
| ஸ்ரீக் | c அத்தப்பத்து | b ஜெயசூரியா | 2 | (7) |
| மற்சிகென்யேரி | not out | | 1 | (3) |
| ஹொண்டோ | b சமிந்தவாஸ் | | 0 | (2) |

உதிரிகள் - 12

**பந்து வீச்சு - நியூசிலாந்து**

| | | | |
|---|---|---|---|
| சமிந்தவாஸ் | 9.5 | 46 | 2 |
| குணவர்த்தன | 7 | 33 | 2 |
| டி சில்வா | 9 | 36 | 1 |
| முரளிதரன் | 7 | 22 | 1 |
| ஜெயசூரியா | 6 | 30 | 3 |
| பெர்ணான்டோ | 3 | 10 | 1 |

# பிறந்ததிகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**உடல் எண்~7**

**உயிர் எண்~6**

7,16,25 போன்ற திகதியில் பிறந்து, பிறந்த திகதி ,மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்6 வருமேயானால் இவர்கள் கேது, சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவா. மற்ற 7 எண்ணிக்கைக் காரரில் இவர்கள் சுகபோகமான வாழ்க்கையை விரும்புவர். இவர்கள் பார்ப்பதற்குச் சுமாரான உயரமுடையவர்களாகவும், கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். நல்ல பேச்சுத் திறமை கொண்ட இவர்கள் வாதம் செய்கின்ற போது காரசாரமாகப் பேசுவர். சில நேரங்களில் தனிமையில் இருந்து கொண்டு தனது எதிர் காலத்தைப் பற்றியும் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சியைப் பற்றியும் சிந்திப்பர்.

ஒவ்வொரு செயலையும் முன் பின் ஆராய்ந்து செயல்படுவர். தன்னால் இயலாத காரியத்தை முடியும் எனச் கூறமாட்டார். சில நேரங்களில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத் தில் அமைதியாக இருக்க ஆசைப்படுவர். சங்கீதம், நாட்டியம், மருத்துவம், தத்துவம், சோதிடம் இவர்களின் மனதைக் கவரும். மலைப் பிரதேசங்களையும் நீர்த் தேக்கங்களையும் ,நீர் வீழ்ச் சிகளையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர்.

அமைதியாக இருக்கும் இவர்களுக்குத் திடீரென்று முன் கோபமும் வருவதுண்டு. இவர்களுக் குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் நல்ல வாழ்க் கைத் துணைவர், நிறைந்த செல்வம், நல்ல ஆரோக் கியம், நல்ல குழந்தை கள் ஆகியவற்றைப் பெற்று ,வீடு, வாகனம், தொழில், உத்தியோகம் ஆகியவற்றோடு வாழ்வர். ஆனால் பெயர் பொருத் தமின்றி இருந்தால் பலவேறு நல்ல வாய்ப்புகள் வந்தும் முன்னேற முடியாமல் தவிப்பர்.

இன்னுமிலருக்கு குடும்பவாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக மாறி விடும். ஆரோக்கியம் பாதிக் கப்படும். குழந்தைகளாலோ அல்லது குழந்தை இல்லாததாலோ பிரச் சினை ஏற்படும். இதனால் இவர்கள் பெயரைப் பொருத்தமான எண் களில் மாற்றி அமைத்துக் கொண்டு சிறப்பற்ற வாழலாம். சில நேரங் களில் எதையோ இழந்து போன்ற காட்சியளிப்பர். பின் தன்னையே தேற்றிக் கொண்டு சுறு சுறுப்பை வர வழைத்துக் கொள்வர்.

எழுதுவதாலும்,பேசுவதாலும்,ஆடம்பரப் பொருட்களை விற்பதாலும், முக்கியமான பதவியை வகிப்பதாலும் உயர்ந்த நிலையை அடைவர். ஆனால பெயர் பொருத்தமில்லாது இருக்குமேயானால் தேவையில்லாத காரியங்களில் இறங்கி மாட்டிக்கொள்வர். அத்தோடு பெண்களாக இருந்தால் ஆண்களாலும்,ஆண்களாக இருந் தால் பெண்களாலும் மன வேதனை அடைவர். இவர்கள் மனம் ஆடம்பரப் பொருட்களைச் சேர்ப்பதிலும், வீட்டை அழகாக வைத்துக் கொள்வதிலும் நாடிச் செல்லும்

தனிமையில் இருக்கும் போது இவர்கள் மனதில் புதுப் புதுக்கருத் துக்கள் தோன்றிய வண்ணம் இருக் கும். இவர்களுக்குப் பிறந்த திகதிக் குப் பொருத்தமாகப் பெயர் அமையுமேயானால் வாழ்க்கை படிப்படியாக முன்னேறிக் கொண்டே செல்லும். ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்த மற்றுப் பெயர் அமையுமேயானால் முன்னேற்றம் தடைப்பட்டு வாழ்க்கை போராட்டம் உள்ளதாக அமைந்து வடும். சந்தோஷமான சூழ் நிலையில சகஜமாகப் பழகும் இவர்களுக்குச் சிறிது மனக் கஷ்டம் இருந்தாலஅடிக்கடி கோபம் உண்டாகும். புதுமையும் பழமையும் கலந்துவாழ்க்கை நடத்துவர்.

என்றும் ஒரு நிலையான எண்ணத துடன் இருக்க மாட்டார்கள். ஆண்டவனை வழிபடும் இவர்கள். சமயத்திற கும்,தெய்வழிபாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று ஆராயத்தொடங்

## சோதிட பலன்

குவர். பொதுவாகத் தனது பிறந்த வழிகளில் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைகின்றனர். இதனால பிறந்த திகதிக்குப் பொருத்தமாகப் பெயரை அமைத்துக் கொள்ளுவது அவசியம்.

### தொழில்

எழுதுவதாலும்,பேசுவதாலும் பொருளட்டுவர். கமிஷன், கண்ட்ராக்ட், ஏஜென்சீஸ்,ஆடம்பரம் சம்பந்தமான பொருட்கள், வாகனம், பச்சைப் பொருள், ஜவுளி, மருந்து போன்றவற்றாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர்.

### நோய்

இவர்களுக்கு மனக் குழப்பம் சம்பந்தமான நோய், மூட்டுவலி, கண்நோய், முதுகுவலி, வாயுக் கோளாறு முதலியன வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும் முறை

கேது,சுக்கிரன், போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன், சுக்கிரன் போன்ற ஆதிக்கமான 19,37,46,64; 15,24,33,42,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொள்ளலாம்.

### பின் பற்ற வேண்டியவை

யோகமான எண்-2,6,1. யோகமான திகதிகள்-2,11,20,29; 6,15,24;1, 10,19,28.யோகமான மோதிரக்கல்- வைடூரியம்,மூன்ஸ்டோன், ரைகர்ஸ்ஜ. யோகமான நிறம்- பச்சை, வெளிர் நீலம், வெளிர் மஞ்சள். ஆகாத திகதி- 9,18,27;3,12,21,30.ஆகாதநிறம்-றோஸ், ஆரஞ்சு, சிகப்பு, கத்தரிப்பூ நிறம்.

**உடல் எண் ~7**

**உயிர் எண் ~7**

7,16,25, போன்ற திகதியில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் முழுமையாக கேது ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்கு ஓரளவிற்கு உயரமாகத் தோற்ற மளிக்கும் இவர்கள் முகம் பொலிவிழந்தது போன்றும், சிந்தனையில் மூழ்கிக் கிடப்பது போன்றும் காட்சியளிக்கும். தனக்கு ஏற்படும் பிரச்சினைகள் யாவற்றையும் பிறரிடம் வெளியிடாது தனது மனத்தில் புதைத்துக் கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருப்பர். தூய்மையான எண்ணம் கொண்ட இவர்கள் எளிமையான ஆடை அணிந் திருந்தாலும் சுத்தமாக இருப்பர்.

கேள்வி,ஞானம் கொண்ட இவர்களைத் தெய்வீக மனிதர் என்றால் மிகையாகாது. தனக்கு வாழ்க்கை சரியாக அமையாது வேதனையில் வாடிக்கொண்டிருந்தாலும் பிறருக் குத் துன்பம் விளைவிக்கும் காரியங்களை ஒரு போதும் செய்யமாட்டார்கள். பொது நல வாதி என்பதை விடப் பிறருக்கு எவ்விதத்திலும் மன தால் கூடதீங்கு நினைக்காதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் நல்ல குடும்பம், நல்ல குழந்தைகள்,நல்ல ஆரோக்கியம் நிறைந்த செல்வம் ஆகியவை அமைந்து வாழ்வர். ஆனால் பெயர் நன்றாக அமையா விட்டால் குடும்ப வாழ்க்கை குழப்பமான வாழ்க்கை யாக மாறி வாடுவர். அல்லது திரு மணம் ஆகாது காலம் தாழ்த்திக் கொண்டே செல்வதால் வேதனையடைவர்.

இன்னும் சிலர் நோயாலோ முன் னேற்றம் பெறத்திறமையிருந்தும வழி தெரியாததாலோ மன வேதனை அடைவர். இதனால் பெயரை நன்றாக அமைத்துக் கொள்வது அவசியம். இயற்கையிலேயே இவர்களுக்குத் தனிமையில் சிந்தனை செய்து கொண்டிருப்பதில் அலாதி இனபம். கற்பனை செய்து எழுதுவதிலும், தியானம் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு. இந்த எண் ணிக்கையில் பிறந்த சிலர் திரு மணமே ஆகாது வாழ்க்கையை சாமியாரைப் போன்று கழித்து விடுகின்றார்கள். இன்னும் சிலர் காமுகராகிச் சில சிக்கல்களில் மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்கின்றனர். பிடிவாத குணமும் இவர்களுக்கு இயற்கையிலேயே உண்டு.ஆனால் பெயர் நன்றாக அமையப் பெற்றவர்களுக்கு வாழ்க்கை சிறப்பாக அமைந்து விடுகின்றது.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாத இவர்கள் எவ்வளவு துன்பம் வந்தாலும் தனக் குள்ளே வைத்துப் புழுங்குவர். சிறந்த கல்வி பெற்று அதிகார உத்தி யோகத்தில் இருந்தாலும், எல்லா வசதிகளையும் பெற்று வாழ்ந்தாலும், சமுதாயத்தை விட்டு ஒரு தனி மனிதன் போல் ஏதோ ஒரு வேதனை யுடன் வாழ்ந்து கொண்டிருப்பர்.

துன்பத்தில் துவளத்தான்நாம் தோன்றி இருக்கிறோம்என்று தனக்குள்ளே எண்ணிக் கொள் ளுவர்.ஆண்களாக இருந்தால் பெண் களால் ஏமாற்றமடைந்தோ பெண் களாக இருந்தால் ஆண்களால் ஏமாற்றம் அடைந்தோ அல்லது விவா கரத்து ஏற்பட்டோ குடும்பம் என்றால் நரகம் என்று எண்ணிக் கொண்டு என்முன் சிலர் அழுததை நான் கண்டிருக்கிறேன். 40 வயதிற்கு மேல் திருமணம் ஆகாது வேதனைப் பட்டுப் பக்தியிலும், விரக்தி ஏற்பட் டுப் வேதனையுடன் வாழ்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமாக அமையப் பெற்றவர்கள் படிப்படியாகத் தன் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டும் தனது மனைவி மக் களுடன சிறப்புற்று வாழ்கின்றனர்.

இவர்களுக்குப் பிறர் செய்வது அனைத்தும் தவறாகத் தென்படும். இவர்களுடைய பழக்க வழக்கங் கள் ஒத்துப் போவதில்லை. தெய்

**ஆர். ஐ. துரைமுருகர்**

வம், பேய்,மந்திரம் இவற்றில் இவர் கள் மனம் நாடிச் செல்லும். மருத்துவம், சட்டம்,சமயம், கலை, கலாசாரம் இவற்றில் ஆராய்ச்சி இருக்கும். சிந்தனை செய்து கொண்டே தான் செல்லவேண்டிய இடத்தைத் தாண்டிச செல்வர். கால்கள் எங்கோ நடந்து செல்லும், மனம் எங்கோ அலைந்து திரியும்.

இப்படித் தவிக்கும் இவர்களுக் குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால் நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தை கள், நிறைந்த செல்வம் பெற்று வீடு ,வாகனம் செல்வ நிலை உயர்ந்து வாழ்க்கை நடத்துவர். இதனால் பெயரைப்பொருத்தமான நல்ல எண்களில் அமைத்துச் சிறப் படையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### தொழில்

எழுதுவதாலும், வழக்கு தீர்த்து வைப்பாதலும்,முன்னேற்றம் காண்பர். மருந்து சம்பந்தமான பொருட்கள், கமிஷன், கண்ட்ராக்ட்,ஏஜென்சீஸ் பச்சை நிறப்பொருட்கள்,ஏலக்ட்ரிக், எலக்ட்ரானிக் கம்பியூட்டர் போன்ற வற்றால் இலாபமடைவர்.

### நோய்

இவர்களுக்கு மனக்குழப்பத் தால் வரும் மன நோயும், தூங்கும் பொழுது கனவுத் தொல்லைகளும், இடுப்புவலி, நரம்புத் தளர்ச்சி,மூட்டு வலி, கண்நோய், இதய வலி, இரத்த அழுத்தம், வாயுக் கோளாறு போன்றவைகள் வர வாய்ப்பிருப்பதால் 42 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத் துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சுக்கிரன் ஆதிக்கமான 15,24,33,42, 51,60,69 போன்ற எண்களிலும்புதன் ஆதிக்கமான 14,23, 32,41,50,59,77 போன்ற எண்களிலும் பெயரை அமைத் துக் கொளளலாம். சந்திர ஆதிக் கத்தில் 38,47 போன்ற எண்களும் நற்பலனைச் செய்யும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-2,6,5.யோகமான திகதிகள்-2,11,20,29; 6,15,24; 5,14,23.யோகமான மோதிரக்கல்- வைடூரியம், முத்து ,மூன்ஸ்டோன், டைகர்ஸ்ஜ. யோகமான நிறம்- பச்சை,வெளிர் நீலம்,வெளிர் மஞ்சள். ஆகாத திகதி-9,18,27. ஆகாத நிறம்- சிவப்பு.

தொடரும்

## கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் உயர்தர கலைப்பிரிவு மாணவி செல்வி சோபிகா தவராஜா மகளிர் விவகார அமைச்சு, சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தியபாடசாலை மட்டக் கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.

இவருக்கான சானறிதழும் பரிசிலும் கடந்த 8ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றமகளிர்தின விழாவின் போது வழங்கப்பட்டது.(உ)

## ரயில் சேவைகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

நூற்றுக்கணக்கான ரயில் சேவைகள் நேற்றும் இன்றும் இடை நிறுத்தப்பட்டடுள்ளன.

ரயில் சாரதிகளுக்கான தகுதிகான் பரீட்சை இவ்விரு நாள்களிலும் நடத்தப்பட்டு வருவதாலேயே ரயில் சேவைகள் இடை நிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் 90க்கும் மேற்பட்ட ரயில் சாரதிகள் தோற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இலவச மூக்குக் கண்ணாடிவழங்கல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தலைவர் செ.சுப்பிரமணியம்தலைமையில் இடம் பெறவுள்ள இந்த இலவச மூக்கக் கண்ணாடி வழங்கல் நிகழ்வில் 200 போபயனடையவுள்ளனர். (உ-7)

## பொது அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மத்தி இளைஞர் கழகம் மாதாந்தம் நடத்தும் பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசு பெற்றவர்களின் விபரம்; ஆரம்பப்பிரிவு:-1ஆம்இடம்பி.பத்ம முரளி, 2ம்இடம் ஜி. விஸ்வருபன், 3ஆம் இடம் எஸ். செந்தூர்ராஜ். மேற்பிரிவு:-1ஆம் இடம் ரி.கணதீபன், 2ஆம் இடம் எம்.அபிராமி,3ஆம் இடம் ஜே.கிஷானந்த . (உ)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

'தன்னம்பிக்கையும் தத்துவ ஞானமும்' என்னும் பொருளிலான வைதிய கலாநிதி வ. சின்னப்புவின் சொற்பொழிவு இன்று பி.ப.2.30 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம்பெறவுள்ளது. (உ)

## வாகனத் தரிப்பிடம்

(கொழும்பு)

வீடமைப்பு,தோட்ட உட்கட்டமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பேரில் கண்டி டொறிங்டனில் 4 மாடிகள் கொண்ட வாகனத்தரிப்பிடம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இதன் அமைப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 58 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இக்கட்டடத்துக் கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண் மையில் நடைபெற்றது. (உ-8)

## ஆன்மீகப் பயிற்சி

(தும்பளை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத் தில ஆன்மீகப்பயிற்சிநெறிநேற்றுமுன் திம்முதல் ரமணாசைதான்யாசுவாமிகளால் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி நெறி எதிர்வரும் செவ்வாய் கிழமை வரை நடை பெறவுள்ளது. (உ-24)

# போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்றியமைக்க நோர்வேத் தரப்பு பரிந்துரை

(கொழும்பு)

இலங்கையரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நோர்வேயின் அனுசரணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை 13மாதங்களுக்கு முன்னர்செய்திருந்தபோது,எதிர்பார்க்க முடியாதிருந்த பிரச்சினைகள் இப் போது தலைதூக்கியிருப்பதால்,அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில திருத்தங்களைச் செய்யவேண்டியுள்ள தென்று நோர்வே தெரிவித்துள்ளது.

இரு தரப்பினர்களுக்குமிடையில் அவசியமற்ற மோதல்கள் நிகழ் வதைத் தவிர்ப்பதற்கு இது முக்கிய மானது என்றும் இதனால்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒருவருடத்தில் சிலபிரச்சினை கள் தோன்றியிருந்தன. சரக்குக் கப்பல்கள் வருவதற்கான பாதுகாப்பை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி தரவில்லை என்று புலிகள் கூறி யுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக் கப்பட்டபோது இவ்விடயம் கவனத் தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இன்றைய சம்பவங்கள் இவ்விடயம பற்றி பொருத்தமான தீர்மானங்க களைச் செய்யவதற்குத் தூண்டு கின்றன என்று நோர்வேயின் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கப்பல் சம்ப வத்தைத் தொடர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கு அரசாங்கமும் புலிகளும் இப் பொழுது இணக்கம் தெரிவித்துள்ள தாக நேற்று முன்தினம் நோர் வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பண்டிகை முற்பணம் 3ஆயிரமாக அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் பண்டிகை கால முற்பணம் 3ஆயிரம்ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரித்த முற்பணம் புது வருடத்துடன் வழங்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரச கூட்டுத்தாபன நியதிச் சபைகளில் கடமையாற்றும் சகல ஊயர்களும் இவ் முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

வட்டி இல்லாமல் 10 மாதங்களில் இக்கடன் கழிக்கப்படும். (உ-8)

# சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்படும்

## மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக இந்திய நிதி அமைச்சர் யஸ்வந்சிங் கூறினார்.


மாநிலங்கள் அவையில் இதனை தெரிவித்த அவர், குறிப்பிட்டதொரு கால எல்லைக்குள் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவிக்கும் படி பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சேது சமுத்திரத்திட்டம் தொடர்பான சாத்திய அறிக்கையை பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக தம்மிடம் அளிக்குமாறு இந்தியக் கடற்படையிடம் வாஜ்பாய் கேட்டு கொண்டுள்ளதாக கூறினார்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி வந்திருந்த போது பிரதமர் இத்திட்டம் பற்றி விவாதித்தாக யஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றிருந்த போது தூத்துக்குடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் ஒன்றை அமைக்கலாம் என்ற யோசனையை தெரிவித்திருந்தார்.

பாலம் அமைக்கப்பட்டால் சேது சமுத்திரத்திட்டம் பாதிக்கப்பட்டு விடும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வைகோ எதிர்ப்புத் தெரிவித்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார். (பி-2)



அலகாபாட் உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி அயோத்தியாவில் சர்ச்சைக்கு உட்பட்டதில் இந்திய தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சிப் பணிகளை தொடங்கியது. நிலத்தைத் தோண்டி அந்த இடத்தில் கோயில் இருந்ததிற்கான தடயங்கள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்யும் பணி நடைபெறுவதால் அவ்விடத்தைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



நாட்டின் எல்லையில் மட்டுமல்ல, நாட்டிற்குள்ளேயும் இராணுவ வீரர்களின் வீர சாகசங்கள் தொடர்கின்றன. படுத்திருக்கும் 18 இராணுவ வீரர்களை தனது மோட்டார் சைக்கிளினால் தாண்டி எல்லோரது இதயத்தையும் சிறிது நேரம் ஸ்தம்பிக்க வைத்தார் இந்த இராணுவ வீரர்.

# தண்ணீரில் படம் வரையும் இளைஞர்

(தருமபுரி)

தண்ணீரில் ஓவியங்களை வரைந்து லிம்கா சாதனைப்புத்தகத்தில் இடம்பிடித்த அரூர் இளைஞர் எஸ். சக்தி நாராயணன் அரசின் உதவியை எதிர்பார்க்கிறார்.

தருமபுரி மாவட்டம், அரூரைச் சேர்ந்த சக்திநாராயணன் ஐடிஐ பிட்டர் படிப்பு முடித்த இவர், தற்போது சலவைக்கற்களில் பெயர் செதுக்கும் தொழில் செய்து வருகிறார்.

சிறுவயதில் இருந்தே ஓவியங்கள் வரைவதில் ஆர்வமுடைய இவர் வழக்கமான ஓவியங்களில் இருந்து வித்தியாசமாய் ஏதேனும் செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

காகிதங்களில், துணிகளில்தான் அனைவரும் ஓவியம் வரைவார்கள். சிலர் அரிசி, அஞ்சலட்டை, கண்ணாடிப் போத்தல் ஆகியவற்றில் படம் வரைந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுவார்கள்.

காற்றால் அதிர்வுகள் உண்டாவதால் தண்ணீரில் படம் வரைவது கடினம். தண்ணீரில் படம் வரையும் முயற்சியை சவாலாக ஏற்றார் சக்திநாராயணன்.

1996-ல் தண்ணீரில் படம் வரையும் முயற்சியைத் துவக்கினார். படம் வரைவதற்கான வண்ணப்பொடிகளைத் தானே தயாரித்தார். துவக்கத்தில் சிறிய , எளிதான படங்களை வரைந்தார்.விரைவில் பலவண்ணங்களில், பெரியஅளவு படங்களையும் வரையக்கற்றார்.

வண்ணப் பொடிகளைக்கொண்டு இந்திய வரைபடம், பறவைகள், விலங்குகள், கார்ட்டூன் படங்கள், இயற்கை காட்சிகள், கடவுள் உருவங்கள் என அனைத்து வகையான படங்களையும் தண்ணீரில் வரைகிறார். ஒருவரது முகத்தை வரைவதுதான் தண்ணீர் ஓவியத்தில் கடினமானது. அரசியல்தலைவர்கள்உட்பட அனைவரது முகங்களையும் பாவனைகளோடு வரைகிறார்இவர். சாதாரணமாக ஒருபடம் வரைய ஒன்றரை முதல் 3மணி நேரம் ஆகிறது.

தண்ணீரில் படம் வரையும் இவரது சாதனை 1997-ல் லிம்கா புத்தகத்தில் இடம் பெற்றது. தற்போது கின்னஸ் சாதனைக்காக முயன்று வரும் சக்தி நாராயணன் கூறியது:

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த அரவிந்தாச்சாரி என்பவர் 3மணி நேரம் அழியாமல் இருக்கும் படத்தை தண்ணீரில் வரைந்தார். அவரது சாதனையை முறியடித்துள்ளேன்.

ஆனால் நான் கண்டுபிடித்துள்ள, இரசாயனப் பொடியை தண்ணீரில் தூவி, அதன் மேல் பல வண்ணத்துகள்களை கொண்டு படம் வரைகிறேன் . தண்ணீரில் படம் வரையும் போது 'அவுட்லைன்' போடும் வசதி கூடகிடையாது. பொடிகளை மெதுவாக தூவிதான் வரைய முடியும். இவ்வாறு வரையப்பட்ட படங்கள் 35 நாட்கள் வரைகூட அழியாமல் இருந்துள்ளன.

படத்தின் அளவைப் பொறுதது ரூபா 500 முதல் செலவாகிறது. படத்தை வெளியில் எடுத்து செல்ல முடியாது என்பதால் தண்ணீரில் வரைந்த படங்களை விற்க இயலவில்லை. தேவைப்படும் இடங்களுக்குச் சென்று நானே தண்ணீரில் படம் வரைந்து தருகிறேன்.

கின்னஸ் சாதனைக்கு முயற்சி செய்யும் எனக்கு ஏழ்மை நிலை பெரிய தடையாகவுள்ளது. .தொண்டு நிறுவனங்களோ,அரசோ, உதவி செய்யுமானால் நிச்சயம் கின்னஸ் சாதனை புரிவேன். நிரந்தர வேலையில்லாத எனக்கு வேலை வாய்ப்பு கிடைத்தால் திறமையை முழுமையாக பயன்படுத்த முடியும் என்றார் சக்திநாராயணன. (பி)

## புதிய தீர்மானம் குறித்து முக்கிய நாடுகள் ஆராயும்

(அஷோஸ்)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புப் பேரவைக்கு சமர்ப்பித்துள்ள புதிய தீர்மானம் குறித்து ஆராயும் முகமாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஸ்பெயின் நாடுகளின் தலைவர்கள் இன்று கூடவுள்ளனர்.

போர்த்துக்கேய நாட்டின் அஷோஸ் தீவிலேயே இந்தக் கூட்டம் இடம பெறவுள்ளது.

இன்றைய இந்தப் பேச்சுவார்த்தையின் போது யுத்த நடவடிக்கைகள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப் பட மாட்டாது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் ஏனைய நாடுகளின் உதவிகளைப்பெறுவது குறித்து ஆராயப்படலாம் என்றும் கூறப்படுகிறது. (உ-2)

## துருக்கியின் புதிய பிரதமராக ராஜீப் ஏடோ பதவியேற்பு

(அங்காரா)

துருக்கியின் புதிய பிரதமராக ராஜிப் ஏடோ ஹேறன் கடந்த வியாழக்கிழமை பதவியேற்றுள்ளார்.

ஈராக் மீது இருமுறை தாக்குதல் நடத்துவதற்காக அதன் அயல்நாடான துருக்கியின் வடபகுதியில் 62 ஆயிரம் துருப்பினரை நிறுத்தி வைக்கும் அமெரிக்காவின் திட்டத்தை துருக்கிப் பாராளுமன்றம் கடந்த வாரம் நிராகரித்திருந்தது.

இந்த முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு அமெரிக்கா நிர்ப்பந்தித்து வரும் நிலையில் புதிய பிரதமர் பதவியேற்பு நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற தேர்தலில் ஏமோ ஹெனின் நீதி மற்றும் அபிவிருத்திக்கான கட்சி அமோக வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## மலேசியாவில் துன்புறுத்தலுக்காளான இந்தியர்கள் வெளியேற முடிவு

(புதுடில்லி)

மலேஷிய பொலிஸாரினால் துன்புறுத்தப்பட்ட இந்திய தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் அந்த நாட்டை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளனர்.

அண்மையில், தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றும் 270 இந்தியர்களை மலேஷியப் பொலிஸார் துன்புறுத்தியதோடு அவர்களது கடவுச் சீட்டுக்களையும் சேதப்படுத்தியிருந்தனர்.

இச்சம்பவம் இந்தியா மற்றும் மலேஷியாவுக்கு இடையிலான உறவை கடுமையாகப் பாதித்துள்ளது.

இந்த நிலையில் துன்புறுத்தப் பட்ட இந்தியர்கள் 270 பேரில் 30 பேர் மலேஷியாவை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளனர்.

இந்தத் தகவலை மலேஷியாவுக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார். (உ-2)

## கொலம்பிய ஓட சிதைவுகளைத் தேட 685கோடி செலவு

(வாஷிங்டன்)

கல்பனா சாவ்லா உள்ளிட்ட விண்வெளி வீரர்களைப் பலி கொண்ட கொலம்பியா விண்வெளி ஓடச் சிதைவுகளை தேடிக் கண்டு பிடிக்க இதுவரை 685 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் பெடரல் அரசின் அதிகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லூசியானா,டெக்கஸ் ஆகிய மாகாணங்களில் இந்த தேடுதல் நடைபெற்றுள்ளது.

இதற்காக விமானம் ஹெலிகொப்ரர், கப்பல்கள், கற்கள், ஜீப்புகள் எனப் பலவேறு வாகனங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. (உ-2)

## இறுதி முடிவு இன்னும் இல்லை

(சாண்டியாகோ)

ஈராக் மீதான யுத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கும் புதிய தீர்மானத்தில் மாற்றங்கள் செய்யப்படும் வரை அதனை ஆதரிக்க முடியாதிருப்பதாக சிலியின் வெளிவிவகார அமைச்சர் ஷெலடாப். அல்வியர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் கூட்டாக சமர்ப்பித்துள்ள இந்த இரண்டாவது தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதா என்பதை ஐ.நா பாதுகாப்புச் பேரவையில் சிலி உட்பட 6 நாடுகள் இன்னும் முடிவு செய்யவில்லை. (உ-2)

## பிரி.பிரதமரின் எதிர் காலம் இருள் நிறைந்ததாகும்

### அரசியல் ஆய்வாளர் எச்சரிக்கை

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் அரசியல் எதிர்காலம் மிகவும் கவலைக்குரிய நிலையில் இருப்பதாக அரசியல் ஆய்வாளர் அன்ரூட்.:.வ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் ஒப்புதல் இன்றி பிரித்தானியா போருக்குச் செல்வது என்பது சர்வதேச சட்டங்களுக்கு முரணாக உள்ளது என்றால், 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரொனி பிளேயருக்கு எதிராக கலகம் செய்வார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ரொனி பிளேயரின் திட்டத்தின் படி பிரித்தானியா போருக்குச் சென்றால் அமைதியற்ற நிலை பாரியளவிலான இறப்புகள் பெரும் அழிவை ஏற்படுத்தும் பயங்கரவாத தாக்குதல்கள் போன்றவை ரொனி பிளேயரின் அரசியல் வாழ்வை இருள் சூழ்ந்ததாக மாற்றும் என்றும் அன்ரூ தெரிவித்துள்ளார். (உ-2)

## வி.எக்ஸ். வாயு பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பு

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத சோதனையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஈராக் வி.எக்ஸ். வாயு தொடர்பான அறிக்கையினை நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கை நேற்று முன்தினம தமக்கு கிடைககப் பெற்றதை ஐக்கிய நாடுகள் அமைப்பின் கண்காணிப்புக் குழுவின்பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.


அத்துடன் தம்மிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ள அறிக்கை ஆங்கிலத்திலும அரபு மொழியிலும் தயாரிக்கப்பட்டுள்ள தாக அந்தப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தறபோது இந்த அறிக்கை, மொழி பெயர்க்கப்பட்டு வருவதாகவும் இதில அந்திரெக்ஸ் தொடர்பான தகவலகள் எதுவும் இருக்கவிலலையெனவும அவர்மேலும்தெரிவித்துள்ளார்.(உ-2)

# சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்பை மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கப் பிரதிநிதிகளுக்



கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பரதிநிதிகளுக்கும் இடையே தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில், இந்தியா நேரடி யான செயற்பாட்டுடன் கூடிய பங் களிப்பு செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தியச் செய்தி நிறு வனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து பேட்டியளிக்கையில்,

இருதரப்புக்களின் பேச்சுவார்த்தை கள் மூலம் வெளிவரும் முடிவுகளை அமுல்படுத்துவதற்கு இந்தியா வினால் மட்டுமே முடியும்.

பேச்சுக்களில் எடுக்கப்படும் முடிவுகளின் மூலம் அமுல்படுத் தும் விடயங்களை கண்காணிக்க எதிர்க்கட்சி, ஆளும் கட்சி உறுப்பி னர்கள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்று குறிப் பிட்டார்.

மேலும், சமாதானப் பேச்சுக்களில் இருதரப்பினரும் சர்வதேச நாடு களுக்கு விளக்கும் வகையில் முடிவுகளை எடுக்கின்ற போதிலும் அதனை அமுல்படுத்துவதில் இவ் இருசாராரும் வேறுபட்ட வழிகளில் செயற்படுகின்றனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடு கையில், சர்வதேச அமைப்புக்களி னால் வழங்கப்படும் நிதிஉதவிகள் இலங்கையின் புனரமைப்புக்கும் அபிவிருத்தித்திட்டங்களுக்குமே வழங்கப்படுகின்றது.

இவற்றை தற்போதைய அரசு வடக்கு கிழக்குமாகாண புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு மாத்திரமே செலவிடுகிறது என்றும் குறைகூறினார். (உ-8)

## ஓராள் அளிக்கை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற அ... ணையில் பிரித்தானியர் ... வழங்கும் அபத்தம், ஹிஸ்... இன்பியல் மதச் சடங்குகள், ... ஆசியக் கதைகூறல்கள், ... நம்பிக்கைகள் இவை அமை... யும் பன்னிரெண்டு பாத்திரப் பல... களினூடாகதனியொருத்தியாக அ... செய்யும் றாணி மூர்த்தியின் ... ஓராள் அரங்கு இன்று மாலை... மணிக்கு நாவலர் கலாசார ... பத்தில் இடம்பெறவுள்ளது.

## 19வது லயன்ஸ் கழகம் அங்குரார்ப்பணம்

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகம் 306பி மாவட்டத்தின் கீழ் வடபிராந் தியத்தில் 19வது லயன்ஸ் கழகம் மல்லாகம் தெல்லிப்பழையில் இம்மாதம் 23ஆம் திகதி அங்குரார்ப் பணம் செய்யப்படவுள்ளது.

மானிப்பாய் வட்டலயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இது ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் 306 பி மாவட் டத்தின் உதவி ஆளுநர் லயன் 62 றொகான்பெரேரா பங்கு கொள்ள வுள்ளார்.

விஸ்தரிப்புத்திட்டத்தின் தலைவர் லயன் எஸ் எஸ் தங்கராஜாவின் முயற்சியினால் இப்புதிய கழகம் உரு வாக்கபபட்டுள் ளது.

இப்புதிய கழத்தின் ஆரம்பத்தலை வராக லயன் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரனும் செயலாளராக லயன் டாக்டர் ருக்மணிராஜ் உதயகு மாரும், பொருளாளராக லயன் என்.சச் சிதானந்தரும் அன்றைய தினம் பதவி ஏற்கவுள்ளனர். (உ-77)

## வன்னிசென்ற இயன் மார்ட்டீன் அடையாளம் காணப்படாத எலும்புக் கூடுகளைப் பார்வை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு இரண்டுநாள் விஜயம் மேற்கொண்ட சர்வதேச மனித உரிமைகள் நிபுணர் இயன மார்டீன் தமிழீழ காவல்துறையினரைச சந்தித்து உரையாடியுள்ளதுடன் காவல்துறைப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள அடையாளம் காணப்படாத எலும்புக் கூடுகளை யும் பார்வையிட்டுள்ளார்.

தமிழீழ காவல்துறையின் பொறுப பாளர் கா. நடேசன், காவல்துறையின் சட்ட ஆலோசகர் கலாநிதி சோமாஸ் கந்தன் ஆகியோரை கடந்த 13ஆம திகதி சந்தித்து பேசிய பின்னர் இயன் மார்டீன் எலும்புக் கூடுகளைப் பார்வையிட்டார்.

கடந்த காலங்களில் கிளிநொச் சியை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்தபோது வீடுபார்க் கச்சென்ற அப்பாவி மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டனர்.

பின்னர் மீண்டும் கிளிநொச்சிப் பிரதேசத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றிய போது இத்தகைய நூற்றுக்கணக்கான சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

இச்சடலங்கள் உருக்குலைந்த நிலையில் இருந்தமையால் ஒரு சிலவற்றையே உறவினர்கள் அடை யாளம் காட்டினர்.

அடையாளம் காணப்படாத எஞ்சிய சடலங்களின் எலும்புக்கூடு கள் கிளிநொச்சிப் பணிமனையில் ஆய்விற்காக வைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## யப்பானியர் யாழ். விஜயம

(திருநெல்வேலி)

யப்பான் சர்வதேச நிதி நிறுவன முகவரகத்தைச் சேர்ந்த ரி.சுகிதா, யசசுகிஸ்கைபிறே ஆகியோர் கடந்த வியாழனன்று யாழ். செயலகத்தில் இன்றைய குடாநாட்டு நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினி யம்மா திலகநாயகம் போல், தலைமைச் செயலக உதவி அரசாங்க அதிபர் வீரபத்திரபிள்ளை ஆகியோர் பங்கேற்றனர். (உ-43)

## வடமராட்சி விஜயம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்திற்கு, லயன்ஸ் கழகவலயத்தலைவர் லயன் வைத்தியகலாநிதி வி. யோகேஸ்வரன் எதிர்வரும் 18ஆம்திகதி செவ்வாய்க் கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன் றினை மேற்கொள்ளவுள்ளார்.

அன்றையதினம் கழக நிதிசேகரிப புக்காக நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கானபரிசில் களையும் இவர் வழங்கவுள்ளார். (உ-52)

## கைக்கடிகாரம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று யாழ். போதனா வைத்திய சாலையில் கண்டெடுக்கப்பட்டிருப் தாகவும் உரியவர் ஆதாரம் காட்டி காரியாலயத்தில் பெற்றுக்கொள் ளலாம் எனவும் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (உ)

## தாதிப்பயிற்சி பட்டப்படிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரபல்கலைக் கழககத்தில் தாதிப் பயிற்சிப் பட்டப் படிப்பு விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்பட் வுள்ளனர். (உ-10)

## ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

மாகாண கல்விச்சேவையினை மேம்படுத்துவதற்குத தேவையான நிதி ஒதுக்கப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளதையும் அதன் அவசியத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளக்கியுள ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது செயலகத்தில் சந்தித்து பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார். (உ-10)

## பந்தம் எடுத்துவருகை

(திருநெல்வேலி)

கிளிநொச்சி புளியம் பொக்கனை ஆலயத்திலிருந்து மீசாலை மாவடிக்கு அண்மையில் பந்தம் எடுத்து வரப்பட்டது.

1990ஆம் ஆணடிற்கு முன் இவ் வாறு நடைபெற்ற போதும், யுத்தம் காரணமாக 12 வருடங்களாக இச் சம்பிரதாயம் நடைபெறாமல் இருந்தது. இப்பந்தம் எதிர்வரும் 17ம் திகதி மீண்டும் புளியம்பொக்கனைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (உ-43)

## இராஜகோபுரம் அமைப்பு

(பருத்தித்துறை)

தென்புலோலிபுற்றளைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் இராஜ கோபுரம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை நடை பெறவுள்ளது. (உ-52)

## சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப் பறித்தெடுக்க ஜே.வி.பி. பாடுபடுகிறது.

அரசியல் சபை அங்கத்தவர் குற்றச்சாட்...

(கொழும்பு)

சிறுபான்மை இனமக்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கும் முயற்சிகளில் அன்று தொடக்கம் இன்றுவரை மக்கள் விடுதலை முன்னணி ஈடுபட்டுவருகிறது என புதிய இடதுசாரி முன்னணியின் அரசியல் சபையின் அங்கத்தவர் ஈ. விஜயதிலக குற்றம் சாட்டியுள் ளார்.

விஜயதிலக தொடர்ந்து உரையாற்றுகையில், மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கொள்கைகளையும், கேட்பாடுகளை யும் சிறுபான்மை இனத்தவர்களை தமிழ், முஸ்லிம் மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும மக்கள் விடுதலைமுன்னணிக்கும் இடையில் கூட்டு ஏற்படுமானால் இன அடிப்படையிலான ஆட்சி... அடிக்கல் நாட்டப்பட்டதா... விடும்.


சமாதான முயற்சிகளை மேலு... முன்னெடுத்துச் செல்லவேண்... மானால் அதற்கு ஜனாதிபதி சந்திரிக்... பண்டாரநாயக்க குமாரது... பூரண ஒத்துழைப்பு அவசியம்.

ஜனாதிபதி தன்குள்ள பொறுப்புக களை உணர்ந்து, அதனை சரியான வழிகளில் நிறைவேற்றுவதை நாட்டு மக்கள் அனைவரும் விரும்பு கின்றனர்.

உறுதிப்பாடு இல்லாத அரசாங்க மொன்றின் தீர்வை தமிழீழ விடு தலைப்புலிகள் ஒருபோதும் ஏற்கமாட் டார்கள். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால் ஸ்திரமுள்ள் அரசு ஒன்று அமைக்கப்படவேண் டும் எனத் தெரிவித்துள்ளார். (உ-8)



கிராம அபிவிருத்தித்திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற தையல் மனையியல் கண்காட்சியிலே பிரதேச செயலகநிர்வாக அதிகாரி ஆர். சிவபுண்ணியம் உரையாற்றுவதையும், பரதேச செயலர் என். கனகரட்ணம், பிரதமவிருந்தினரான யாழ். தலைமைக காரியாலய உதவி அரசஅதிபர் வி.வீரபத்திரபிள்ளை ஆகியோர் கண் காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம். (படம் : பரு. நிருபர்)



குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் . எஸ்.எஸ்.தங்கராசா, வித்தியாலயத்திற்கு தமது அன்பளிப்பான கணனித் தொகுதியை உப அதிபர் டி. சென்ரனிடம் கையளிப்பதையும், தமிழர் ஆசிரியர் சாங்க சிரேஷ்ட செயலாளர் தா.பஞ்சலிங்கம் அருகே நிற்பதையும் படத்தில் காணாலாம்.

## அமெரிக்காவின் போர் முயற்சிக்கு புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

போலிக் காரணங்களைக் காட்டி ஈராக் மீது வெறித்தனமாகப போர் தொடுக்க நிற்கும் அமெரிக்காவின நிலையை புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டித்து எதிர்த்துள்ளது.

இது குறித்து புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை ஒன்றையும் வெளி யிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், அண்மை யில் இருபது நாடுகளைச் சேர்ந்த 128பிரதிநிதிகள் லண்டனில் கூடி சர்வதேசப் போர் எதிர்ப்பு இயக்கம சார்பாக மார்ச் 15 ஆம் திகதி போர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு விடுத்துள்ள அறைகூவலை எமது புதிய ஜனநாயகக் கட்சி சர்வதேச ஒருமைப்பாட்டுடன் ஏற்றுக் கொள்கின்றது.

அதனை இவ் அறிக்கை மூலம் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு இடதுசாரி ஜனநாயக சக்திகளுக்கும் தெரியப் படுத்தி மார்ச் 15-17 ஆம் திகதிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடு மாறும் வேண்டிக் கொள்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)



அண்மையில் திருமறைக்கலாமன்ற அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்ட கம்பன் மகன் நாட்டுக்கூத்தில் ஒரு காட்சி (கொழும்புத்துறை நிருபர்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன்

# யாழ். போதனா வைத்தியசாலையை புதிய இடத்திற்கு மாற்றத் திட்டம்

### சிவாஜிலிங்கம் எம்.பி. தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். போதனா வைத்தியசாலையை வேறிடம் மாற்றுவதற்குரிய திட்டங்கள் திட்டப்பட்டுவருவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

மேற்படி வைத்தியசாலையில் மேற்



கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய திட்டவரைபு சமர்ப்பிப்பும் இது தொடர்பிலான வைத்தியசாலை நிர்வாகத்தினருடனான கலந்துரையாடலும் அண்மையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற போது சிவாஜிலிங்கம் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரமுகர்கள் அண்மையில் கிளிநொச்சி வந்திருந்த போது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்து நான் கலந்துரையாடினேன்.

அப்போது அவர்கள் வைத்திசாலையின் அமைவிடம் பொருத்தமற்றதாக இருப்பதனை என்னிடம் சுட்டிக் காட்டினார்கள்.

கழிவு நீரை அகற்றுவதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்த இடப்பற்றாக்குறை நிலவுகின்றது.

வைத்தியசாலை கழிவுநீர் போய்ச் சேருமிடம் பண்ணைக் கடலாகவிருப்பதால், இங்கு பிடிக்கப்படும் மீன்களை உண்பவர்களுக்கு பல்வேறு வியாதிகள் ஏற்பட வழி ஏற்படுகிறது.

இதனால் சமுத்திரத்துடன் கழிவு நீர் கலப்பதற்கு ஏற்ற இடமாக வைத்தியசாலை அமைவிடம் இருக்க வேண்டியதன் அவசியம்.

வைத்தியசாலையை நவீனமயப்படுத்தி சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கேற்ற சூழல் தற்போதைய அமைவிடத்தில் காணப்படாமை போன்றவற்றை எனக்கு எடுத்து விளக்கினர்.

அத்துடன், அமைவிடத்தை மாற்ற வேண்டியதன் அவசியப்பாட்டையும் வலியுறுத்தினர்.

தவிரவும், புதிதாக அமைப்பதற்கான நிர்மாணநிதி , பொறியியல் வசதி, நவீன மயப்படுத்தல் ஒழுங்குகளைத் தாம் செய்து தருவதாகவும் என்னிடம் உறுதியளித்தனர்.

எனவே, தற்போதைய வைத்தியசாலையை புனரமைப்பது தொடர்பில் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பது நல்லதல்ல என்று சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (உ-4)

## பிரதேச செயலகங்களூடாக

# காணாமல் போனோரின் விபரங்கள் திரட்டல்

(சிறாம்பியடி)

யாழ். குடாநாட்டில் கடந்த கால வன்செயல்களின் போது காணாமல் போனோர் தொடர்பான விபரங்களை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் தத்தமது பிரிவிற்குட்பட்ட கிராமசேவையாளர் களூடாகத் திரட்டி வருகின்றனர்.

அத்துடன், இத்தகைய வன்செயல்களின் போது இடம்பெயர்ந்து வாழும் மக்களில் தமது சொந்த இடங்களில மீளக்குடியமர விரும்பும் குடும்பங்களின் பெயர் விபரங்களையும் பிரதேச செயலகங்கள் திரட்டி வருகின்றனர். (உ-67)

## அமெரிக்கா விடுத்த எச்சரிக்கையின் எதிரொலி

# இலங்கை வரும் ஈராக்கியர்மீது தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து இலங்கைக்குள் வரும் ஈராக்கியர்கள் மீது கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்குள் சந்தேகத்திற்கிடமான மூன்று ஈராக்கியர்கள் வந்திருப்பதாகக் கிடைத்த எச்சரிக்கைகளை அடுத்து கொழும்பிலுள்ளவெளியுறவு அமைச்சு குடிவரவு அதிகாரிகளுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

சுமார் 60 நாடுகளிலுள்ள ஈராக்கிய ராஜதந்திரிகளோ, ஈராக்கிய தேசத்தவரோ அந்தந்த நாடுகளிலுள்ள அமெரிக்கச் சொத்துக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று வாஷிங்டன் நிர்வாகம் அறிவித்திருப்பதாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மூன்று ஈராக்கியர்கள், ராஜதந்திரிகளுக்கான கடவுசீட்டில் இலங்கைக்குள் நுழைந்தனராயினும் அதன்பின்னர் அவர்களின் நடமாட்டங்கள் காணப்படவில்லை.

இது பற்றி அமெரிக்கா, கொழும்பு நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டு வருகிறது. அவர்கள் மூவரும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடுசெய்வதற்கு வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று ஈராக்கிய தூதரகம் மறுத்துள்ளது. (உ)

## நூல் நிலையம் திறப்பு

(சில்லாலை)

மாதகல் சென்ஜோசவ் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலையம், கடந்த புதனன்று பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. (உ-58)

# தொடர் வெகுஜனப் போராட்டங்களுக்கு தயாராகின்றனர் மட்டக்களப்பு மக்கள

(கொழும்பு)

மட்டக்களப்பில் இன்று முதல் தொடர் வெகுஜனப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு கடற்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதைக் கண்டித்தும், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ்க்கைதிகள் விடுதலை செய்யப்படாதது குறித்தும், கடற்பரப்பில் கடற்படையின் அத்துமீறல் களை கண்டித்தும் இப்போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

இப்போராட்டங்களின் ஆரம்பக் கட்டமாக களுவாஞ்சிக் குடியில் பட்டிருப்பு பிரதேச ஒன்றியத் தின் ஏற்பாட்டில் இன்று ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் அனுட்டிக்கப்படவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை இவ்விரு மாவட்டங்களிலும் வெகுஜனக் கண்டனப் பேரணிகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. (உ-8)

## ஆட்கடத்தல் தடுப்பு

# சட்டம் குறித்து ஆராய இலங்கை பூரண ஆதரவு

### ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்கடத்தல், மற்றும் ஆயுதக கடத்தல் உட்பட பாரிய குற்றச் செயல்களை சர்வதேச ரீதியில் தடுப்பதற்கான சட்டங்கள் பற்றி ஆராய்வதற்கு இலங்கை அரசும்தனது பூரண ஆதரவை வழங்கும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி கொழும்பு ஜெய் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற ஆட் கடத்தல் மற்றும் பாரிய குற்றச் செயல்கள்குறித்து சர்வதேச ரீதியில் ஆராய்வதற்கான இருநாள் கருததரங்கில் ஆரம்ப உரையாற்றிய போதே அமைச்சர் ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இக் கருத்தரங்கில் 38 நாடுகளைச சேர்ந்த நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஆட்கடதல், ஆயுதக்கடத்தல் போன்ற பாரிய குற்றச் செயலகள் இலங்கையிலும் கூடுதலாக காணப்படுகின்றன.

இலங்கையில் ஆட்கடத்தல் குற்றச் சாட்டின் பேரில் மட்டும் 52 பேர் கடந்த வருடம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு ஆட்களைக் கடத்தும் போது பெரும் ஆபத்தை கொடுக்கிறது. அதிலும் குறிப்பாக கடல்மார்கமாக கடத்தப்படுவது அதிகரித்துள்ளதுடன் இதனால் உயிரிழப்புக்களும் அதிகரித்துச் செல்கின்றன.

எனவே, இவற்றை ஆராயும நிபுணர்கள், அமைச்சர்கள் வெற்றிகரமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார்களானால் நிச்சயமாக இப்பாரிய குற்றச் செயல்களை தடுக்க முடியும் என்றார்

இதேவேளை, கடந்த வருடமும் இத்தகைய 38 நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள், அமைச்சர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கு இந்தோனேஷியாவில் நடைபெற்றும் அதன் தொடர்ச்சியாகவே இம்மாதம் 13ஆம் திகதி கொழும்பில் இக்கருத்தரங்கு நடைபெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அடுத்த கருத்தரங்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தோனேஷியாவில் நடைபெறும் எனவும் இக்கருத்தரங்கில் ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, ஒஸ்ரியா, பஙகளாதேஷ், பூட்டான், கம்போடியா, தென்கொரியா, இந்தியா, சீனா, பிஜி, பிரான்ஸ், இந்தோனேஷியா, ஈரான், ஜப்பான் கிரிபட்டி, தென்கொரியா, மலேசியா, மொங் கோலியா, மியான்மார், நௌரு, நியூஸ்லாந்து, புதிய கல்போனியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சமூலா, சிங்கப்பூர், சிரியா, தாய்லாந்து, திமோர், துருக்கி, வியட்னாம ஆகிய நாடுகள் பங்கு பற்றவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (உ-10)


## பிள்ளைகளின் கருத்துகளுக்கும் செவி கொடுப்போம்

"இவ்விடத்திற்கான உலகச் சிறுவர் நிலையின் மையப் பொருள், சிறுவர் பங்குபற்றுதல் ஆகும். இதன் நோக்கம் சிறுவர்களினதும் வளரினம் பருவத்தினரதும் வாழ்க்கையைப் பாதிக்கின்ற தீர்மானங்களை எடுக்கும் போது, இவர்களின் எண்ணக் கருத்துக்களை கவனத்திலெடுப்பதற்கும் வெளிக் கொணர்வதற்கும் வளர்ந்தவர்களுக்கு இருக்கக்கூடிய கடப்பாட்டினை உணர்த்துவதாகும்.

- கோபி ஏ. அன்னான்

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம்.

வெளியீட்டு அனுசரணை- Sc(UK)

(C/5849)

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி :
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P 222 2261 Ext 274

## சிறுவிளம்பரம்


### இசைக் குறிப்புக்கள்

ஓர்கன், வயலின், புல்லாங்குழல், கிற்றார், வீணை, மெலோடிக்கா போன்ற ''இசைக்கருவிகளில்'' சினிமாப் பாடல்களை இசைக்கக் கூடிவாறு ''இசைக் குறிப்புக்கள்'' என்னும் புத்தகம் (பாகம் 1) வெளி வருகின்றது. S.S.றஜீந்திரன், 75, கோவில் வீதி, நல்லூர். (கைலாச பிள்ளையார் கோவிலிலிருந்து 300m தெற்கே) (6816)


### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்,களபூமி கிளுவனை ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ)

# போராட்டத்தில் ஈடுபட்ட புலிகள் அரசியல் நீரோட்டத்தில் இணைய அவகாசம் வேண்டும்

## நோர்வே அமைச்சர் விடார் ஹெல்கீசன் கருத்து

(கொழும்பு) -

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராகி வரும் இவ்வேளையில், சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு இருதரப்பினரும் பொறுமை காக்க வேண்டும் என நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது விடயமாக மேலும் கருத்துக் கூறிய விடார் ஹெல்கீசன்,

கடந்த 20 வருடங்களாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் நீரோட்டத்தில் கலக்கச் செய்வதற்கு முழுமையான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் அனைவரினதும் மனதில் ஓர் அரசியல் சிந்தனை வளர வைக்க வேண்டுமானால், அவர்களுக்கு அரசியல் ரீதியிலான சில பயிற்சிகள் அளிப்பதற்கு சில காலம் எடுக்கும் என்பதை அரச தரப்பு உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத் தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது பற்றி சந்தேகம் எழுந்தது.

ஆனால், இப்போது இதற்கான சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு இருதரப்பும் கலந்து கொள்ளும் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில்,

கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேலும் சிறப்பாக அமுல்படுத்துவது குறித்து அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் ஆராயப்படும்.



கடந்த காலங்களில் எதிர்பாராது நிகழ்ந்த சம்பவங்களினால் யுத்த நிறுத்த அமுலாக்கம் குறித்து ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)


# சீருடைப் பொதி விநியோகம் 20ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் விநியோகம் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் கிளைகள் மூலம் நடைபெறவுள்ளது.

2002.12.30 ஆம் திகதி வரை விண்ணப்பித்த மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தத்தம் பிரிவு கிராம அலுவலர்களிடம் சீருடைத் துணி முத்திரைகளைப் பெற்று, குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சீருடைப் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜே/84,85,86,87,88 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல. 1 இலும், ஜே/81,82,83 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல.7இலும், ஜே/78,79,80 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல.15இலும், ஜே/61,62,63 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல.17 இலும், ஜே/64,65,66,75 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல.25 இலும் ஜே/76,77 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்நதவர்கள் கிளை இல. 27இலும், ஜே/73,74 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல.28இலும், ஜே/67,68,69,70,71,72 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிளை இல.32 இலும் சீருடைப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார். (உ)



யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் அதிதிகளாக கலந்து கொண்டவர்களையும், அதிபர் உரையாற்றுவதையும் படத்தில் காண்கிறீர்கள்.



யா/அளவெட்டி அருணாசல வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் அதிதிகளாகக் கலந்து கொண்ட தெல்லிப்பளைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் கா.சந்திரபாலன், கணக்காளர் ந.யோகேந்திரராஜா ஆகியோரை அதிபர் கு.ஜெகநாதன் அழைத்து வருகின்றார்.


தரம் 08 மாணவர்களுக்கான

## கட்டுரைப் போட்டி

கட்டுரையின் தலைப்பு : ''எனக்குச் சிறகு முளைத்தால்''

கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

முடிவுத் திகதி : 25.03.2003

இணைக்கும் பத்திரம்

கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------

பாடசாலை :------------------------------

கற்கும் தரம் :------------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------------

ஆசிரியர்


# கப்பல் தாக்கியழிப்பைக் கண்டித்து கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாயன்று சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் மகஜர் ஒன்றினை நேற்றுக் கையளித்தது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இம்மாதம் 11 ஆம் திகதி சர்வதேச கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்கி அதிலிருந்த 11 கடற்புலிகளைக் கொன்ற சட்டபூர்வமற்ற விரும்பத்தகாத செயலை யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இது போன்ற சம்பவங்களைத் தடை செய்வதற்காகச் சர்வதேசக் கடல் சட்டங்கள் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் நோக்கம் கொண்ட கடற்படையினர் மீது விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் அரசு மக்களின் நல்லெண்ணத்தைப் பெறலாம்.

அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பகுதியினரிடையேயும் நம்பிக்கையை ஏற்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர ஆவன செய்ய வேண்டும்!

இரு பகுதியினருக்குமிடையிலான சமநிலை பேணப்படுவதற்கான அவசர தேவைகளை நடுநிலை வகிப்போர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப சமாதானத்தினாலேயே முடியும்.

கடந்த ஒரு வருட காலத்தில் அகதி மக்களை சொந்த இடத்தில் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

தற்போது ஏற்பட்ட நிகழ்வினால் மக்களிடையே பய உணர்வும் சமாதான ஒப்பந்தம் முறிவடையுமா என்ற ஏக்கமும் காணப்படுகின்றது.

நோர்வே அரசின் முயற்சி இந்த அழகிய நாட்டின் எல்லாப் பிரிவு மக்களையும் சமாதானத்துடனும் நல்லெண்ணத்துடனும் வாழ்வதற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன் பொது மக்கள் இருக்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கும் நோர்வேத் தூதகரத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-4,7)

## கொடுப்பனவு

(குருநகர்)

வன்னியில் இருந்து வந்து குருநகர்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்குரிய காசோலைகள் செயலகத்தால் அந்தந்த வங்கிக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அடையாள அட்டை தொலைத்தவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் செயலகம் மேற்கொண்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. (உ-74)

## கௌரவிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற போஷகர் மற்றும் இசை ஆலோசகர்களின் கௌரவிப்பு விழாவும் ''பருவ மாணவர்கள்'' நூல் விமர்சன விழாவும் ஞானசம்பந்தர் கலைமன்ற கொழும்புக் கிளைத் தலைவர் கே.நடனசபாபதி தலைமையில் இன்று கலை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்ற போஷகர் பட்டயக் கணக்காளர் கலாநிதி அ.சோமசுந்தரம் பிள்ளை, மன்ற இசை ஆலோசகர் கலாபூஷணம் சரஸ்வதி கோபால சாமி ஆகியோரே இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவிலே சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை நிகழ்த்தவுள்ளார்.

நடன சபாபதியின் ''பருவ மாணவர்கள்'' நூலின் விமர்சன உரையை மதுரைப் பண்டிதர் டாக்டர் கே.சச்சிதானந்தம், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை, டாக்டர் எஸ்.சுந்தரமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ-52)

## இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் இன்று பி.ப. 4.30 மணிக்கு 22 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை விளையாட்டுக் கழகம் ஆகியன இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. (உ)





சர்வதேச கடற்புலிகளின் கப்பல் அழிக்கப்பட்டதைக் கண்டித்து மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிப்பதையும், தற்போதைய நிலைமை தொடர்பாக விளக்குவதையும் படங்களில் காணலாம். படங்கள்:க.பவன்

# இன்று ஒரு தகவல்

## உயர் இரத்த அழுத்தம்

நமது உடம்பில் இரத்த அழுத்தம் இருக்கிறதே. அது நல்லதா? கெடுதலா? உடனே அது கெடுதல் என்று தான் சொல்வோம். ஆனால் அது உண்மையில்லை. இயற்கையான ஒன்று. அந்த அழுத்தம் அதிகமாகப் போனால்த் தான் கெடுதல். அதைத்தான் நாம் B.P என்று சொல்கிறோம். ஆனால் உண்மையிலேயே உயர் இரத்த அழுத்தம் (Hypertension).

இதயம் என்பது ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்கிற ஒரு பம்! இதயம்சுருங்கி இரத்தத்தை பம் செய்கிற பொழுது இரத்த அழுத்தம் கூடுதலாக இருக்கும். இதற்குப் பெயா Systolic Blood Pressure! இதயம் விரிந்த நிலைக்குத் திரும்புகிற பொழுது இரத்த அழுத்தமும் குறைகிறது. இதற்குப் பெயர் Diastolic blood Pressure ! இப்படியே இது மாறி மாறி இருக்கும். B.P 140/90 என்கிறாரல்லவா? அது இது தான். சீராக இருக்க வேண்டிய இரத்த அழுத்தம் ஓர் அளவுக்கு மேலே அதிகரித்து விட்டால் ஆபத்து ஆரம்பம் என்று அர்த்தம். சரீ... இந்த உயர் இரத்த அழுத்தம் உண்டாவதற்கு என்ன காரணம்? இதனாலே தான் இது வருகிறது என்று ஒரு காரணத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனாலும் வம்சாவளிக் காரணம் மிகவும் பதற்றமான (டென்சனான) சூழ் நிலையில்வேலை செய்வது. உடம்பு குண்டாக இருப்பது. இவைகள் (High B.P) உயர் இரத்த அழுத்தத்துக்குத் துணை செய்கிறது என்று வேண்டு மென்றால் சொல்லலாம்.

இது கிருமியினால் உண்டாகின்ற வியாதி இல்லை. உடம்பில் ஏற்படுகிற ஒரு பழுது. அவ்வளவு தான். 40 வயதுக்கு மேல் தான் பொதுவாக இது பாதிக்கின்றது. அவைகள் சரி! ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கிறது. அதைக் கட்டுப் படுத்துவதற்கு வழி ஏதாவது உண்டா? உண்டு மருந்து கொடுத்தும் சரி பண்ணலாம். மருந்தில்லாத சிகிச்சை முறைகளும் இருக்கின்றன. மருந்து சாப்பிடுவதென்றால் டாக்டரிடம் போய் விடலாம். அதற்கு இப்பொழுது சுமாராக 30 மருந்துகள் இருக்கின்றதாம். மருந்தோடு உடல் கட்டுப் பாடும் மனக்கட்டுப்பாடும் சேர்ந்தால் மிகவும் விசேஷம். அது இருக கட்டும். மருந்து இல்லாமல் நாம் செய்ய வேண்டியது என்ன? அதைத் தெரிந்து கொள்வோம். முதலில் சீரான உடற் பயிற்சி... நடத்தல் மிகவும் நல்லது. மனதை அமைதிப் படுத்துவதற்கு யோகாசனம்-ஆழ் நிலைத் தியானம் போன்ற பயிற்சிகள் நல்லது. ஒரு காலத்தில் யோகாசனம் பண்ணுங்கள். தியானம் பண்ணுங்கள் என்று சொன்னால் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். இப்பொழுது மருத்துவ நிபுணர்களே அவைகள் அவசியம் தான் என்று சொல்கிறார்கள்.

இன்னொரு அதிசய சிகிச்சை முறை இப்போது வழக்கத்திற்கு வந்திருக்கிறது. BIO Feed Back என்பது பெயர். மூளையின் அழுத்த அலைகளைப் பதிவு செய்து அவற்றை மறுபடியும் உடம்பினுள் செலுத்தி இரத்த அழுத்தத்தைச் சீராக்கி விடுகிறார்கள். சிலருக்கு இந்த ஹை B.P Border Line இல் இருக்கும். அவர்களுக்கு மருந்துகள் அவசிய மில்லை. வாழ்க்கை முறையில் சில மாற்றங்களைப் பண்ணிக் கொண்டாலே போதும். Behaviourial Modifications அது எப்படியென் றால்... பரபரப்பான வாழ்க்கை முறையைத் தவிர்க்க வேண்டும். புகைபிடிக்கிற பழக்கம், மது அருந்தும் பழக்கம் இருந்தால் அவற்றை விட்டுவிட வேண்டும். சாப்பாட்டில் உப்பைக் குறைக்க வேண்டும். கொழுப்புச் சத்து ஆகாரத் தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். முடிந்தால் விட்டு விடலாம். குடும்பத்தில் ஏற்கனவே யாருக்காவது உயர் இரத்த அழுத்தம் (High B.P) இருந்தால் சந்ததிகள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நடுத்தர வயதை அடைந்தவர்கள் அவ்வப் பொழுது (B.P) இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது. டாக்டர் சொல்வதை நம்மில் பலர் சரியாகக் கேட்பதில்லை. அதனாலே தான் இடைஞ்சல்.

ஒரு ஆள் B.P என்று சொல்லி டாக்டரிடம் போனான். "உடம்பு குண்டாக இருக்கிறது. அதை முதல் குறைக்க வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய" என்றார். சரி என்று சொல்லி விட்டு வந்தான். செய்தான். கொஞ்ச நாட்கள் கழித்து மறுபடியும் டாக்டரிடம் போனான். என்னப்பா? உடற்பயிற்சி பண்ணினேன் டாக்டா! என்றான். "என்ன பண்ணினாய்?" என்று கேட்டார். முன்பு சிகரெட்டைக் கடையில் வாங்குவேன் தினமும் நானே என் கையாலேயே உருட்டித் தயார் பண்ணிக் கொள கிறேன் டாக்டர் என்று சொன்னான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## பொலிஸாருக்கான சட்டவியல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாருக்கான சட்டவியல் மற்றும் மனித உரிமைகள் தொடர் பாக கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மனித உரிமைகள் தொடர்பில் பொலிஸார் கடைப்பிடிக்க வேண்டிய விடயங் கள், மனித உரிமைகள் மீறுவதால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதேவேளை, சட்டரீதியாக சில விடயங்கள் கடைப்பிடிக்கும் போது மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான கருத்துக்களை பொலிஸ் அத்தியட்சகர்கள் ஒவ்வொருவரும் எடுத்துரைத்தனர். (உ-4)

# படையினரின் அச்சுறுத்தல் குறித்து பாராளுமன்றில் அதிருப்தி வெளியிடப்படும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

(வவுனியா)

ஜனநாயக ரீதியாக மக்கள் தங்க ளுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க உரிமை உடையவர்கள். அந்த வகையில் கடந்த 13ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற ஹர்த்தாலை குழப்பும் வகையில் பாதுகாப்புப் படையினர் நடந்து கொண்ட விதம் குறித்து வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாது காப்பு அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

அத்துடன், சமாதான முயற்சி களைக் குழப்பும் தென்னிலங்கையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து தமிழ்க் கூட்டமைப்பு கவலை கொண்டுள்ளது எனவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முறைப்படி அமுல் படுத்தப்பட வேண்டுமெனக் கூட்டமைப்பு கோரி வரு கின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச கடற்பரப்பில் இடம் பெற்ற புலிகளின் கப்பல் மீதான வலிந்த தாக்குதல் சம்பவமானது சமாதா னத்தை முறியடிக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே வவுனியாவில் மக்கள் ஹர்த்தாலை அனுட்டித்த போது பாது காப்பு படையினர், வர்த்தகர்களையும் மற்றும் பொது மக்களையும் அச்சுறுத் தியுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக அடுத்த வாரம் பாராளுமன்றில் கூடும் போது தமிழ் கூட்டமைப்பு தனது அதிருப்தியை வெளியிடுமெனவும் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார். (த)

# புலிகளின் கப்பல் தாக்கியழிப்பு யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது

## தொழிலாளர் ஐ.மு கண்டனம்

(கொழும்பு)

சமாதானத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தமிழீழ விடு தலைப் புலிகளின் கப்பல் அண்மை யில் தாக்கப்பட்ட சம்பவத்தை இலங் கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பின ருமான எஸ். சதாசிவம் கருத்து வெளியிடுகையில்,

தற்போது இலங்கையில் ஏற்பட் டுள்ள சமாதானம் நிரந்தரமாக அமைய வேண்டும் என்றும், இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் சம உரிமையுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றும் அனைவரும் எதிர்பார்க்கின்ற வேளை சில யுத்த வெறி பிடித்த சக்திகள் பல்வேறு வழிகளிலும் சமாதான முயற்சி களைக் குழப்ப முனைகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்கு முன்பு சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுமூலமாக புலிகளை அணுகி யிருக்கலாம்.

ஆனால் யதார்த்தத்திற்கு அப்பாற் பட்ட வகையில் இச்சம்பவம் நடை பெற்றுள்ளது.

எனவே, படைத்தரப்பு இனிமேலா வது இது விடயத்தில் நிதானமாக செயற்பட வேண்டும். அவ்வாறு செயற் படாது விட்டால் கடந்த காலங்களைப் போன்று பாரதூரமான விளைவு களை எதிர்நோக்குவதுடன், மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி அப்பாவி மக்களை பலிக்கடாவாக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

## வட-கிழக்கில் புதிதாக 140 வைத்தியர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தி லுள்ள வைத்தியசாலைகளுக்கு புதி தாக 140 வைத்தியர்கள் நியமிக்கப்ப டவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் குமார வேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

25 அம்புலன்ஸ் வண்டிகளும் புதிதாக வழங்கப்படவுள்ளதாகவும் இதில் 16 அம்புலன்ஸ் வண்டிகளை நிக்கோட் திட்டமும், 9 அம்புலன்ஸ் வண்டிகளை வடகிழக்கு மாகாண சபையும் வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு புதிதாக 800 வைத்தியர்கள் நியமிக்கப்பட வுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்போது 75 எம்.பி.பி.எஸ் வைத்தியர்கள் பணி யாற்றி வருகின்ற போதிலும் இவ் வைத்தியசாலைக்கு மேலும் 25 வைத் தியர்கள் தேவைப்படுவதாக வைத்திய சாலைப் பணிப்பாளர் தேவராஜன் தெரிவித்துள்ளார். (உ-8)

## இராசி பலன்

16.03.2003

(பங்குனி 02 ஞாயிறு)

| | |
|---|---|
| திரயோதசி | மு.இ 8.36 வரை |
| ஆயிலியம் | கா 7.02 வரை |
| மகம் | கா 7.03 தொடக்கம் |
| இராகுகாலம் | 4.51 - 6.21 |
| சுபநேரம் | 9.21 - 10.51 |

பிரதோஷ விரதம்

**மேடம்**
காரிய தாமதம், பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, தாழ்ந்த சுபாவம்.

**இடபம்**
புத்தி சஞ்சலம், பயந்த சுபாவம், காரிய தாமதம், புத்திரரால் கவலை.

**மிதுனம்**
புதிய பொருள் சேர்தல், அமைதியான நிலை, அன்னியர் சந்திப்பு, நல்ல முயற்சி.

**கடகம்**
மாதர் நட்பு, அதிக செலவு, வீண் விவாதம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
நண்பர்கள் உதவி, போசன சுகம், சயனசுகம், காரிய அனுகூலம்.

**கன்னி**
மனச் சோர்வு, பிரயாணம், பிதா சிந்தை, தனவிரயம்.

**துலாம்**
தனதானியம் சேரும், குடும்ப சுகம், மனமகிழ்ச்சி, காரிய நன்மை.

**விருச்சிகம்**
கடின முயற்சி, சுபநிகழ்வு, பிறர் உதவி, தெய்வ சிந்தை.

**தனுசு**
உடல் உழைப்பு, வயிற்று வலி, காரிய தாமதம், கட்டுப்பாடு.

**மகரம்**
போசன சுகம், காரிய தடங்கல், பொருள் விரயம், அமைதிக் குறைவு.

**கும்பம்**
திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, கௌரவ மான நிலை, முயற்சி கைகூடும்.

**மீனம்**
சுவாரஸ்யம், நல்ல காரியம், ஆரோக்கியம், தொழில் ஆர்வம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## ஜோர்தானில் வேலை வாய்ப்பிழந்த 104 இலங்கையர் நேற்று திருப்பியழைக்கப்பட்டனர்

(கொழும்பு)

ஜோர்தானில் பணிபுரிந்த 104 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பி யுள்ளனர்.

ஜோர்தான் ஆடைத் தொழிற் சாலையில் பணிபுரிந்த இந்த இலங் கையர்கள் அனைவரும் தொழிற் சாலை மூடப்பட்டதன் காரண மாகவே நாடு திரும்பியுள்ளனனர்.

இவ்வாறு தொழில் இழந்து நாடு திரும்பியுள்ளவர்களில் 69 பேர் பெண்களாவார்கள்.

நாடு திரும்பியோரில் அனேக மானோர் குருநாகல் மற்றும் அனுரா தபுரம் மாவட்டங்களை சேர்ந்தவர்கள்.

ஜோர்தானில் வேலைவாய்ப் பின்றி இருந்த இந்த இலங்கை யர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் கே.மாரிமுத்து மேற்கொண்டிருந்தார். (உ-8)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

(ஏழாலை)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்கு மாறும் நடப்பு வருடத்திற்கான சந்தா பணத்தினையும் செலுத்தி உதவு மாறும் யாழ் தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (உ-88)

## கடலுணவு பதனிடும் தொழிலக புனரமைப்புக்கு தடை விதிப்பு

(கொழும்பு)

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தால் பல இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந் துள்ள கடலுண்வு பதனிடும் தொழிற் சாலை திருத்த வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இத் தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதை சுட்டிக்காட்டி திருத்த வேலை களை பாதுகாப்புக் காரணங்களுக் காக இடை நிறுத்துமாறு 512 ஆவது பிரிகேட் பிரிவினால் கடிதம் மூலம் சமாசத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக, யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த கடல் உணவு பதனிடும் தொழிற் சாலையும், குளிரூட்டும் அறையும் பலத்த சேதமடைந்துள்ளன.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எடுத்த முயற்சியின் பலனாக புனர்வாழ்வு அமைச்சினால் வழங் கப்பட்ட சுமார் 21 இலட்சம் நிதியினை கொண்டு திருத்த வேலைகள் நடை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-74,8)

*வழிநோககான் வாய்பன செய்யான்*
*பழிநோக்கான்*
*பண்பிலன் பிறர்க்கு இனிது*
*–குறள்–*

## வலம்புரி

# அலட்சியம் செய்தல் கூடாது!

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையக் கூடியது சமஷ்டி முறையிலான 'சுயாட்சி' என்பது மறுக்க முடியாத உண்மை.'சுயாட்சி' என்ற தீர்வு முறையை நோக்கியே அரசு-புலிகளின் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.விடுதலைப் புலிகள் தனி ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு சமஷ்டி முறையிலான சுயாட்சி அமைப்பை ஏற்கத் தயாராக இருக்கின்றனர் என்ற நிலைப்பாடு தாய்லாந்தில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது முன் வைக்கப்பட்டது.நோர்வேயின் அனுசரணையுடன் சர்வதேசத்தின் உன்னிப்பான கண்காணிப்பின் மத்தியில் சர்வதேச நாடொன்றில் நடைபெறுகின்ற அரசு-புலிகள் சமாதானப் பேச்சில் இருதரப்பில் யார் சறுகினாலும்,இவர் தான் பேச்சுவார்த்தையை-சமாதான முயற்சியை முறித்துக் கொண்டாரென சுட்டு விரலால் காட்டி அடையாளப்படுத்த வெளிநாடுகள் பல தயாராக இருக்கின்றன.இந் நிலையில்,சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் புலிகள் தரப்பில் கலந்து கொண்ட ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வெளிப்படையாக விடுதலைப் புலிகள் 'சுயாட்சி'அமைப்பை ஏற்கத் தயாராக உள்ளனர் எனக் கூறியிருந்தார்.

எனினும் சிங்களப் பேரினவாதிகள் பாலசிங்கம் வெளிப்படையாகக் கூறிய கருத்தை காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. எதற்கெடுத்தாலும் புலிகள் தனிநாட்டுக்காகவே போராடுகிறார்கள் என்ற கருத்தை முன்வைக்க பேரினவாதம் தவறுவதல்லை.அதேவேளை பேரினவாதிகளின் கூக்குரல்கள், ஆர்ப்பாட்டங்கள்,பேரணிகள் குறித்து சர்வதேச நாடுகளும் மௌனம் சாதிக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையின் போது புலிகள் தமது நிலைப்பாடுபற்றி தெளிவாக கூறியுள்ள போதும்,அதுபற்றி உலக நாடுகளோ,சிங்களப் பேரினவாதிகளோ அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

இததகையதொரு நிலைப்பாட்டின் மத்தியிலும்,சர்வதேச கடற்பரப்பில் வைத்து புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டதுடன் 11 புலிப் போராளிகள் உயிரிழந்த நிலையிலும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஓர் தெளிவான முடிவைத் தெரிவித்துள்ளார்.

அம் முடிவில் இலங்கை அரசிற்கு வழங்கப்படும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவே.சுயாட்சி முறையை அரசு மன விருப்பத்தோடு தரமறுக்குமாயின், தமிழர்கள் பிரிந்து சென்று தனி ஈழநாட்டை அமைப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே புலிகளின் மேற்போந்த அறிவிப்பை அரசு அலட்சியம் செய்யுமானால் அதன் விளைவு பாரதூரமானதாக அமைவது தவிர்க்க முடியா ததாகி விடும்.அதன் பின்னர் சிந்திப்பது வெள்ளம் வந்த பின் அணை கட்டும் முயற்சியாகும்.

# வன்முறையை நீக்கி, இறை ஏவுதலுக்குப் பணிந்து

# எல்லோருடனும் நல்லுறவைப் பேணி வாழ்வோம்

## பரமபிதா காட்டிய பாதை

உலகில் உள்ள பல நாடுகளில் உரிமைப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை விட ஆயுத பலம் பொருந்திய நாடுகள்,



யார் பலம் பொருந்தியவர்கள்? நான் தான் பெரியவன் என்ற பெருமையை நிலை நாட்ட, புது ரகமான நாசகார ஆயுதத் தளபாடங்களைப் பரீட்சித்துப் பார்த்து உலகை வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு உள்நாட்டு அரசியலில் மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுக்கப் பலவகைப் போராட்டங்களால் மக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் ஒருவர் ஒருவரிடம் அன்பற்ற பகைமை உறவைக் காட்டுகின்ற செயல்பாடுகளாகும். ஆனால் உரோமைச் சமுதாயத்துக்கு புனித பவுல் அறிவுரை கூறும்போது ''கடவுள் நம் சார்பில் இருக்கும் போது நமக்கு எதிராக இருப்பவர் யார்? தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள் தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? (உரோ 8:31-33) என்று கடவுளின் அன்பின் தன்மையை வெளிப்படுத்துகின்றார்.

### பற்றுறுதி தான் பெரிது

கடவுள் ஆபிரகாமிடம் அவர்மகன் ஈசாக்கைத் தமக்கு பலியிடுமாறு கேட்டதற்கு ஆபிரகாம் மறுப்புத் தெரிவிக்காமல் தன் மகனைக் குறிப்பிட்ட பலிப்பீடத்திற்கு அழைத்துச் சென்று பலியிட ஆயத்தம் செய்து, மகன் மேல் கத்தியை ஓங்கினார். வான தூதர் மூலம் இறைவன் ஆபிரகாமைத் தடுத்து நிறுத்தினார். ஆபிரகாம் தம்மேல் கொண்டுள்ள பற்று நிலையைக் கண்டு ஆபிரகாமுக்கு இறைவன் ஆசி வழங்கினார். இவ்வுலகில் படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் இறைவனின் கைவேலைகள். இறைவன் நினைத்தால் எம்மை உயர்த்தவும் வீழ்த்தவும் முடியும். ''ஆண்டவருடைய செயல்களெல்லாம் மிகவும் நல்லவை; அவருடைய கட்டளையெல்லாம் குறித்த நேரத்தில் நிறைவேறும்'' (சீராக் 39:16) எனவே மானிடப் பிறவி எடுத்த நாம் இறையன்பைப் பிரதிபலிக்கும் பிறரன்பின் மூலமே இறையன்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### அன்பே உலகை ஆளும்

போட்டியும், பொறாமையும், அகங்காரமும், மமதையும் உலகப்போக்கின் அதிகாரத்தைத் தீர்மானிக்கின்ற கருவிகளாக இருக்கின்றன. நிலையில்லா வாழ்வை நிலையானது என்று மனிதன் நினைத்தே இவ்வளவு ஆணவத் தன்மையுடன் நடந்து கொள்கின்றான். ''காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா'' என்பதையும் ''காதறுந்த ஊசியும் வாராதே கடைவழிக்கு'' என்ற அருள் மொழிகளையும் மறந்தவனாகவே பிறரை அடக்கி ஆள முனைகின்றான் மனிதன். எத்தனை சக்திகள் இருந்த போதும் அன்பு ஒன்றே என்றும் உலகை ஆள வல்லது. மற்றவைகள் எல்லாம் தற்காலிகமானவையே.

### மனமாற்றங் காணல்

தவக்காலம் எம் அகத்தே சென்று நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து சீர்ப்படுத்தும் அருளின் காலமாகும். எமது உணவை-ஒறுத்து, தான தரும கிருத்தியங்களால் எம் அயலானை நேசித்து, மன்னித்து ஒப்புரவாகி இறைமனித உறவை உருவாக்கிக் கொள்ள நாம் மனமாற்றங்காண வேண்டும். இல்லையேல் ''மனிதர் முதல் விலங்குகள் வரை எல்லா உயிரினங்களுக்கும் சாவு, படுகொலை, சண்டை, வாள், பேரிடர், பஞ்சம், அழிவு, நோவு ஆகியவை உண்டு. பாவிகளுக்கோ இது ஏழு மடங்கு மிகுதியாகும்'' (சீராக் 40:8,9) நாம் செய்யும் ஒவ்வொரு நன்மை தீமையான செயலுக்கும் அதற்கேற்ப பரிசோ, தண்டனையோ கடவுளாலே வந்தே தீரும்.

### இயேசு வழி செல்லல்

வன்முறைச் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், வன்முறைக்கு இடம்கொடுக்காமல் ஆபிரகாமைப் போல இறை ஏவுதலுக்குப் பணிந்தவர்காளாகவும் எல்லா மக்களுடனும் நல்லுறவைப் பேணுகிறவர்களாகவும் பிறரை மன்னித்து மதிக்கின்றவர்களாகவும் இயேசு பெருமான் காட்டிச் சென்ற சிலுவை வழியே எம் வாழ்வைத் தொடர்கின்றவர்களாகவும் எம் வாழ்வை மாற்றிக் கொள்ள இத்தவக்காலத்தை முற்றும் பயன்படுத்துவோம். மனமாற்றங் காண்போம். இறையருள் பெற்றுக் கொள்வோம்.

**யாழ்.ஜெயம்தாசன்**

# சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பணிபுரிந்த உத்தமர் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை

## இன்று 93 ஆவது சிரார்த்த தினம்

வடமராட்சி மேலைப் புலோலியூரைப்பிறப்பிடமாகக் கொண்ட பல்துறை வித்தகர் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை தமிழும் சைவமும் தேய்பிறையாகாமல் முழு நிலாவாக என்றும் பிரகாசிக்க ஒவ்வொரு கணங்களையும் எதிர்கால சந்ததியினருக்காக உளமார உழைத்த மகான்.

### கல்வி

1871 ஆம் ஆண்டு மேலைப் புலோலியில் பிறந்து ஐந்தாவது வயதில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். உரிய வயதில் கல்விதனை முடித்துக் கொண்டு, ஆற்றல் மிகு மாணவனாய் சமய நூல்களைத் தேடிக் கற்றுக் கொண்டிருந்த வேளையில், அப்பாடசாலையிலேயே அசிரியனாகப் பதவியேற்று நல்லாசானாக விளங்கினார். எதிர்கால மாணவ சமூகத்திற்கு மடைதிறந்த வெள்ளம் போல் அறிவு நீரை இறைத்து வந்தார்.

அவர் கற்க ஆரம்பித்த காலத்தில் கல்வியைப் பெறுவதற்குரிய போதுமான வளங்கள் கிடைத்திருக்கவில்லை. அந்நிலையிலும் பொறுமையுடன் கல்வியைக் கற்றார். தகமையும் பெற்றார்.

''பாடை ஏறினும் ஏடது கைவிடேல்'' எனும் முதியோர் மொழிதனை மனதிருத்தி பல்துறை நூல்களைக் கற்றார். பல நூல்களை எமக்கு ஆக்கித்தந்தார்.

சைவமும் தமிழும் வளர்ந்தோங்க பணிகள் ஆற்றிய பல பெரியார்களின் பண்பு நெறிகள் கதிரவேற பிள்ளை அவர்களை பெரிதும் கவர்ந்திருந்தது. அவர்களைப் பின்பற்றி சைவமும் தமிழும் வளர்வதற்கு இதயத்துடிப்பு உள்ளவரை அயராது உழைத்தார்.

### பட்டங்கள்

பொது நிகழ்வுகளில் பங்கேற்று தம்மாலான உதவிகள் புரிய வேண்டும் என்ற பொதுப் பார்வை கொண்ட அவர், ஆற்றிய உரைகளும் எழுதிய நூல்களும் பொதுப் பணிகளும் பல கல்விமான்களைக் கவர்ந்திருந்த காரணத்தினால் கல்விச் சமூகமானது சைவ சித்தாந்த மகாசரவம் மாயாவாத தும்ச கோளரி, அத்துவித சித்தாந்த மகோதாரணர், அகராதிப் பேராசான் போன்ற பட்டங்களை வழங்கி கௌரவித்தமை நோக்கத் தக்கது.

வடமராட்சி மண்ணின் பெருமைக்குரியவர்களில் சிறப்பு மிக்கவர். சதாவதானி கதிரவேற்பிள்ளை. அவரின் கல்விசார் எச்சங்களை அடியொற்றியவர்களாக நாம் வாழ வேண்டும்.

### உரைகள்

சைவத்தையும் தமிழையும் ஊட்டி வளர்த்த தமிழர் பரம்பரை ஒன்று வளர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அப்பரம்பரையில் விழுதாகக் காணப்பட்டவர் தான் கல்யாண சுந்தரனார். திரு வி.க. தமது வாழ்க்கைக் குறிப்பேட்டில் சதாவதானி பற்றி மிகவும் விரிவாக எழுதியமை பிள்ளை அவர்கள் எம் இதயங்களில் நிழலாடுவதை எடுத்தியம்பிநிற்கின்றது. பிள்ளை அவர்கள் ஏகாதசி புராணத்திற்கு அரும்பத விளக்கமும் திருவானைக் கலம்பகம், சிவராத்திரி புராணம் ஆகியவற்றிற்கு தெளிவான விரித்தி உரைகளும் நைடதம் எனும் நூலுக்கு சிறப்பு மிகு உரைநடையும் எழுதிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தமை எம்மவர்களின் நெஞ்சில் நிறைந்த விடயமாகும்.

பிள்ளை அவர்கள் ஆக்கிய தமிழ் அகராதி என்னும் நூல் மிகவும் பெறுமதி வாய்ந்ததாக பல கல்விமான்களால் புகழ்ந்து பேசப்பட்ட சமகாலத்தில் புழக்கத்தில் இருந்த அகராதி நூல்கள் போல் அல்லாது மருத்துவம், வேதாந்தம், சித்த நூல் தத்துவம், அளவை, சோதிடம், வானநூல் போன்ற பல்துறை சார்ந்த பலநூறு சொற்களை மிகவும் தெளிவாக உள்ளடக்கியதாக இருந்தமை அவரின் ஆற்றலுக்கு மகுடம் சூட்டியதாக அமைந்திருந்தது.

### உருவச்சிலை

மேலைப்புலோலியூர் மக்களால் நிர்வகிக்கப்படும் சனசமூக நிலைய முன்றலில் நிறுவப்பட்டிருக்கும் கதிரவேற்பிள்ளையின் திருவுருவச் சிலை இன்றும் உயிரோட்டமுள்ளதாகக் காணப்படுவதற்கு அவர் மக்களின் பால் கொண்ட உன்னத ஈடுபாடே காரணமாகும்.

சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பெரும் பணிகளின் பயனாக தமிழகம் சென்றிருந்த கதிரவேற்பிள்ளை அம்மண்ணின் கல்விமான்களால் பெரிதும் கவரப்பட்டவராக குறிப்பிடத்தக்க ஒரு விழா நிகழ்வில் பேறிஞர்களின் காத்திரமான உரையாடல்களுக்கு சொற் பஞ்சமின்றி விடையளித்தார். அவரது ஆற்றலைக் கௌரவிக்கும் முகமாக ''சதாவதானி'' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. தமிழ் மொழிக்காற்றிய தொண்டுகளுக்காக தமிழக மண்ணில் கௌரவிக்கப்பட்டு மேன்மை கொண்டவர் தான் சதாவதானி கதிரவேற்பிள்ளை.

''நாட்டிற்கு நலமான தொண்டுகள் செய்பவர்கள் மரணிப்பதில்லை'' எனும் வைரவரிகளுக்கு புத்துயிர் ஊட்டி எம் இதயங்களில் நிலைத்து நிற்கின்றார் அவர்.

**கே.ஆர்.திருத்துவராசா**

## தினசரி தியானம்

### சுதந்திரம்

விடா முயற்சியுடன் யோகத்தில் ஈடுபடு. உன் திறமையையும், சுறுசுறுப்பையும் உபயோகி. எண்ணங்களையும் விருப்பங்களையும் ஒழி. நடப்பதெல்லாம் விதி வசம் என்று கூறாதே. சிங்கம் போல் நிமிர்ந்து நில். உறுதியுடன் முயற்சி செய். நீ சுதந்திரம் அடைவாய்.

மனதைச் சமநிலைப்படுத்து. அதை இறைவன் பால் செலுத்து. நிலத்தை உழும் குடியானவனைப் போல் பொறுமையுடன் முயற்சி செய். உன் சாதனத்தில் நீ ஒழுங்காக இரு. அது உனக்குச் சுதந்திரம்.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

''வாழ்வோர் நாட்டில் ஆண்டவர் திருமுன் வாழந்திடுவேன''

இறைவனுக்காக நாம் எதை இழக்கத் தயாராக இருக்கின்றோமோ அதை இறைவனே நமக்கு பல மடங்காக தருகின்றார். தனது ஒரே மகனை இழக்க தயாராக இருந்த ஆபிரகாமுக்கு அவரது வழிமரபை விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பலுகச் செய்தார். இன்று நற்செய்தியில் நாம் வாசிக்க கேட்ட உருமாற்ற நிகழ்ச்சியும் நமக்கு இதை தெளிவுபடுத்துகின்றது. இயேசு இறைவனுக்காக தனது உயிரை இழந்து அவரால் உயிர்ப்பிக்கப்படுவார் என்பதைப்பற்றி இறைவாக்கினர்களின் பிரதிநிதியான எலியாவும், திருச்சட்டத்தின் காவலரான மோசேயும் இயேசுவுடன் உரையாடுகின்றனர். இந்த மறைபொருள் சீடர்களுக்கு அப்போது விளக்கவில்லை. அவர்கள் அந்நிகழ்ச்சியின்போது நடந்த வெளியடையாளங் களில் தங்கள் கவனத்தை செலுத்துகின்றார்கள். அதனால் கூடாரங்கள் அமைப்பதைப் பற்றி பேசிக்கொள்ளுகின்றார்கள். இயேசுவின் இரண்டாவது வருகையை இந்நிகழ்ச்சி அடிக் கோடிட்டு காட்டினாலும் அவர் இறந்து உயிர்க்க வேண்டும் என்ற இறைத் தந்தையின் கட்டளையை ஏற்கின்றார் என்பதை இதன் மையக் கருத்தாக நாம் பார்க்கின்றோம். வெளி அடையாளங் களில் நமது கவனத்தை சிதற விடாமல் இறைவனுக்காக நம்மை இழப்பதற்கு நாம் நம்மையே தயாரிப்போம்.

**காவலன்**

## 6-வது சுற்று...

உள்ள நியாயங்களையும், எமது கடுமையான ஆட்சேபனைகளையும் பேச்சுவார்த்தையில் தெரிவிக்குமாறு தலைவர் பிரபாகரன் என்னைப் பணித்துள்ளார்.

யப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையை நாம் பகிஷ்கரித்தால், அது எமது இயக்கத்திற்கு எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பிரசாரங்களை இலங்கை அரசு மேற்கொள்ளலாம்.

இதேபோன்று ஆத்திரமூட்டும் செயற்பாடுகள நடந்தபோதும் யுத்த நிறுத்தத்தை இறுக்கமான முறையில் கடைப்பிடித்து அமைதியைப் பேணி பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்திவந்துள்ளோம் இதனையே மக்களும் விரும்புகிறார்கள் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவமானது தலைமைப் பீடத்தையும் எமது போராளிகளையும் உலுப்பிய போதும், நாம் மனம் தளராது, உறுதி தளராது அமைதியைப் பேணி பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்தி எம்மால் முடிந்தளவிற்கு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளோம்.

யப்பானின் தலைநகர் ரோக்கியோவில் 18ம் திகதி முதல் நான்கு தின்ங்கள் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பிரதானமாக கடற் படையினரின் யுத்த நிறுத்த மீறல்களும் இதனால் எழுந்துள்ள சிக்கலான நிலைமை பற்றியும் வாதிக்கவுள்ளோம். விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம், உயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் பற்றி முக்கியமாக விவாதிக்கவுள்ளோம்.

யப்பான் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன் இந்திய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை வெளியிடப்படலாம் என்று சொல்லப்படுகின்றது. இதில் எந்தளவிற்கு உண்மை உண்டு என்று கூறமுடியாது.

சதீஸ் நம்பியாரின் அறிக்கை பிற்போடப்பட்டுக் கொண்டு போவதை நாம் விரும்பவில்லை காரணம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும் வெளியிலும் இடம் பெயர்ந்த எமது மக்களை மீளக்குடியமர்த்தல் முக்கிய விடயமாகும்.

எமது மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமராமல் அமைதியும் இயல்பு வாழ்க்கையும் ஒரு போதும் தோன்றமாட்டாது. இந் நிலையில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் கோட்பாடுகள் பற்றிப் பேசுவதில் எந்த விதமான பிரியோசனமும் இல்லை. இதனைப் பேச்சுவார்த்தையில் இறுக்கமாக வலியுறுத்தவுள்ளோம்.

தமிழ் மக்களின் சுயாட்சி உரிமை, நிதிப்பகிர்வு, வருமானங்கள் பற்றியும் இப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ம)

## அரச-புலிகள்...

தயார்படுத்திக் கொள்ள மேலும் கால அவகாசம் எடுக்கும் அவர்கள் போராளிகளாக இருந்து அரசியல் வாதிகளாக மாற வேண்டிய தேவை உள்ளது. இதேவேளை சமாதான முயற்சியில் மூன்றாம் தரப்பாகிய நோர்வேயின் பங்கு தெளிவாக இருத்தல் வேண்டும். எனினும் சம்பந்தப்பட்ட தரப்புக் களுககு நோர்வேத் தரப்பு அழுத்தம் கொடுக்கும் சக்தியை கொண்டிருக்கவில்லை இதனால் நாம் தலையிட முடியாது. நாம் தலையீட்டாளர்களாக பணியாற்றவில்லை. அனுசரணையாளர்களாகவே செயற்படுகின்றோம்.

சமாதானம் என்பது தீவிரமாக மேற்கொள்ளக் கூடியதல்ல. இராணுவ அணுகுமுறைக்கும் சமாதான அணுகுமுறைகும் வித்தியாசங்கள் உண்டு என்றும் கூறினார். (ந-5)

## விளையாட்டுப் போட்டி

(நவக்கிரி)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று முதல் மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளன.

இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-233)

## க.பொ.த..

கள் தாமதமடைவதாகவும் அவர் தெரிவித்தார். 2002 டிசம்பரில் 383,015 பாடசாலை மாணவர்களும் 130,851 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். (ந)

## கஞத்துறை...

களை வடக்குக் கிழக்கு நீதி மன்றங்களுக்கு மாற்றி 15 நாட்களுக்குள் நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் அளித்துள்ள வாக்குறுதியை அடுத்தே இவ் வுண்ணா விரதப் போராட்டம் நேற்று இடை நிறுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை கடந்த 6வருடங்களாக களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீ.லோகநாதனை விடுதலை செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது. (வ)

## இராணுவச் சீருடை அணிந்தவர் கைது

இராணுவச் சீருடையை ஒத்த உடையுடன் கொழும்பில் உள்ள படைத் தலைமையகத்தின் உயர் அதிகாரிகளின் உணவு விடுதியில் உணவு அருந்திக் கொண்டிருந்த நபர் ஒருவரைப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கஜபாகுப் படைப்பிரிவின் சீருடை போன்ற உடையுடன் இவர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்படி உணவு விடுதியில் உணவு அருந்தி வந்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதனையடுத்து இவருடன் நெருங்கிப் பழகிய அனைவரையும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக் குட்படுத்தியுள்ளனர். (உ-10)

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி

## 12 இளைஞர்களிடம் பணத்தை சுருட்டிச் சென்ற பயண முகவர்

(மிருசுவில்)

குறைந்தளவு பணத்தில் வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக ஆசை வார்த்தை கூறி வடமராட்சியிலிருந்து 15 இளைஞர்களை கொழும்புக்கு அழைத்துச் சென்ற போலி வெளிநாட்டுப் பயண முகவர் ஒருவர், இளைஞர்களிடமிருந்து ஒரு தொகைப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றிருக்கிறது. இதுப்பற்றி மேலும் தெரியவருவதாவது,

சவுதி அரேபியாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி வடமராட்சி கிழக்கு குடத்தனை மற்றும் அம்பன் ஆகிய பகுதிகளில் இருந்து 15 இளைஞர்களை பிரஸ்தாப முகவர் கடந்த திங்கட்கிழமை கொழும்புக்கு அழைத்துச் சென்று அங்கு விடுதி ஒன்றில் தங்க வைத்தார்.

மறுநாள் விடுதிக்குச் சென்ற பிரஸ்தாப முகவர் பயணச் சீட்டுப் பெறவேண்டியுள்ளதால். முதலில் 20 ஆயிரம் ரூபாவைத் தரும்படியும், மிகுதி 80 ஆயிரம் ரூபாவை வெளி நாட்டில் உழைக்கும் போது தரும்படியும் இளைஞர்களிடம் கூறினார். இதனை நம்பி இளைஞர்கள் 12 பேர் பணத்தைக் கொடுப்பதற்கு இணங்கினார். ஆனால் மூன்று இளைஞர்கள் பணத்தைக் கொடுப்பதற்கு மறுத்து விட்டனர். இதனால் குட்டு வெளிப்பட்டு விடலாம் என்று அஞ்சிய பிரஸ்தாப முகவர் மூன்று இளைஞர்களையும் வேறொரு விடுதிக்கு மாற்றி ஏனைய இளைஞர்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டார்.

புதன்கிழமை காலை 12 இளைஞர்களும் தங்க வைக்கப்பட்டிருந்த விடுதிக்குச் சென்று அவர்களிடம இருந்து தலா10 ஆயிரம் ரூபாய்படி பெற்றுக் கொண்டு மறுநாள் பயணச சீட்டுடன் வருவதாகக் கூறிச் சென்றார்.

இரண்டு தினங்களாக முகவர் விடுதிக்கு வராததையடுத்து தாம ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொண்ட இளைஞர்களும் மற்றைய மூன்று இளைஞர்களுமாக பரிதாபத்துடன் நேற்று காலை வீடுதிரும்பினர். (த-81)

## வடக்கின் மாபெரும் போர் வெற்றி தோல்வியின்றி முடிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற வடக்கின் மாபெரும் போர் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி ஆட்ட நேரம் முடியும்வரை 8 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. இப் போட்டியில் ஆட்ட நாயகனாக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் தனஞ்செயனும், சகலதுறை ஆட்டக்காரராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் அகிலனும் சிறந்த துடுப்பாட் வீரராக யாழ். மத்திய கல்லூரி வீரர் றெகானும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.மத்திய கல்லூரி அணித்தலைவர் ரஜீவ் குமாரும், சிறந்த களத் தடுப்பாளராக சென்ஜோன்ஸ் கல்லூரி வீரர் டினேஸும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-55,5)

## பொன் அணிகள் போரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி

(மண்கும்பான்)

சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிற்கிடையில் நடைபெற்ற பொன் அணிகள் கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 8விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் பொன் அணிப்போட்டி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதல இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. எம்.றொசாந்தன் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், ஜி.செல்வின் லொயிற் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பணக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும்இழந்து 150 ஓட்டங்களையும் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதன் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரியை 8விக்கெட்டுக்களால் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி கொண்டது.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் ஜி.செல்வின் லொயிற்றும் சகலதுறை ஆட்டக்காரராக யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர் எம்.திலீபனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் எம்.றொசாந்தனும், சிறந்த பந்து வீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிவீரர் ஆர். வினோதனும், சிறந்த களத் தடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் ஜி.செல்வின் லொயிற்றும் தெரிவு செய்யப்பட்டனர். (த-55)

CHNS
CEYLINCO HOME NURSING SERVICES

வீட்டில் இருக்கும் முதியோரை, நோயாளரைப் பராமரிக்கும் சேவை

உங்கள் உற்றார், உறவினரைப் பராமரிக்க வீட்டில் ஒருவர் இல்லையே! என்ற கவலையா?
கவலையை விடுங்கள்



இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளில் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிக் காத்திருக்கிறது.
உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

த(THE) பினான்ஸ் லிமிட்டெட்,
முதலாவது மாடி,
173, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P.222-2310.

சிலிங்கோ கூட்டுநிறுவனம்
சிலிங்கோ வீட்டுத் தாதிய பராமரிப்புச் சேவை
(C/5851)

ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
* அரசியல் கட்டுரைகள் * வியாசரின் பதில்கள்
* அறிவியல் ஆக்கங்கள் * மகளிர் உலகம்
* கவிதைக் கலசம் * சிறுவர் அரங்கம்
இன்னும்
தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான் எழுதும்
ஈழராஜா எல்லாளன்
தொடர்கதை
வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள்.
சிறுநீர்ப்பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[C/5602]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.